ஸங்கீத
# ஸரிகமபதநி
பிப்ரவரி – 2026
இசை – நாட்டிய மாத இதழ்
ரூ.30/-



## இறைவனுக்கு பாடிப் பணிசெய்தவருக்கு
# பத்மஸ்ரீ விருது

With best compliments



**SRI. V.NARAYANA IYER MEMORIAL TRUST (REGD.)**

# NARAYANA VISHWANATH

**Chairman**

'Gitalaya' AD-48, AD-Block,
1st Street, Anna Nagar, Chennai – 600 040.
Phone : 044-26212454 / 26214524
E-mail : nvishwat@gmail.com

# ஸரிகமபதநி

இசை – நாட்டிய மாத இதழ்

மலர் - 30 இதழ் - 04

தலைமைப் புரவலர்
பத்மஸ்ரீ. டாக்டர்.
**நல்லி குப்புசாமி செட்டியார்**

முதன்மை ஆசிரியர்
**நாராயணவிஸ்வநாத்** (RITES)

ஆசிரியர்
கலைமாமணி **ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்**

துணை ஆசிரியர்கள்
**சங்கர் வெங்கட்ராமன்**
**சிம்மம்குமார்**
**ஏவி. ஆர். வர்மா**

வடிவமைப்பு
**சி.ஜி.சுரேஷ்**

அச்சிடுபவர்
**டி.வேல்முருகன்,**
நியூ சித்ரா பிரஸ்
32, ஜீவரத்தினம் சாலை,
சென்னை-600081.

நிர்வாக அலுவலகம்
AD-48, முதல் தெரு, அண்ணாநகர்,
சென்னை - 600040.

அஞ்சல் முகவரி
**SARIGAMAPADANI**
POST BOX NO : 6050
ASHOK NAGAR, CHENNAI - 600083.

ஸரிகமபதநி பவுண்டேஷனுக்காக வெளியிடுபவர்
**இராம. பாஸ்கர்**

**Contact : 6385151004 (MSG)**
**Web: www.sarigamapadani.in**
**E-mail - sangeethasarigamapadani@gmail.com**



**Our Sponsors**
**Nalli Chinnasamy Chetty**
Chennai - 600 017.


* * *

**சி**வராத்திரியை முன்னிட்டு சிதம்பரத்தில் தொடங்கப்பட்ட ‘நாட்டியாஞ்சலி’ இன்று தமிழகத்தின் குக் கிராமங்களில் அமைந்துள்ள சிவாலயங்களில் கூட நடைபெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது. இதனால், அந்தந்த பகுதிகளில் வாழும் உள்ளூர் நாட்டியமணிகளுக்கும் மேடை வாய்ப்பு அந்த ஒரு நாளாவது கிடைத்து வருகிறது.

நமது தொன்மைக் கலையான பரதக் கலையின் வளர்ச்சிக்கான வாய்ப்பு இந்த ஒருநாளோடு முற்றுப் பெறாமல் இருக்க வேண்டும். அதற்கு வார விடுமுறை நாட்களிலும் முக்கியமாக அஷ்டமி, பிரதோஷ நாட்களிலும் ஆலயங்களுக்கு வருவோரது எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

மேற்குறிப்பிட்ட நாட்களில் அந்தந்த மாவட்ட (மண்டல) கலை பண்பாட்டுத் துறையும், இயலிசை - நாடக மன்றமும், அறநிலையத் துறையும் இணைந்து இது போன்ற ‘நாட்டியாஞ்சலி’ நிகழ்ச்சிகளை தமிழகத்து சிவாலயங்களில் உள்ளூர் நாட்டியப் பள்ளிகளோடு இணைந்து நடத்திட முன்வர வேண்டும்.

இதன் மூலம் ஆலயங்களுக்கு வருகிற பெற்றோர்களுக்கும் - குழந்தைகளுக்கும் இக் கலை மீதான ஆர்வம் பெருகி அது நமது தொன்மைக் கலையாம் பரதக் கலையின் மேம்பாட்டிற்கும் - வளர்ச்சிக்கும் ஊக்கமளிப்பதாக அமையும்.

**– நாராயண விஸ்வநாத்**
முதன்மை ஆசிரியர்

* * *

# நாளும் வாழும் கே.பி.எஸ்



**த**னது கணீரென்ற குரலாலும், தனித்துவமான தமிழ் உச்சரிப்பாலும் இன்றைய இளம் தளிர்களுக்கும் அறிமுகமாகி மறைந்தும் மறையாது வாழ்ந்து கொண்டிருப்பவர் கே.பி.சுந்தராம்பாள். ஔவையார் என்றாலே எல்லோரது மனக் கண்முன் வந்து நிற்பவரும் இவரே. தமிழ்க் கடவுளான முருகனையும் இவரையும் பிரித்துப் பார்க்க முடியாது. பனி இல்லாத மார்கழி இருக்கலாம். ஆனால் கே.பி.எஸ்-ன் பாடல் இல்லாத மார்கழி விடியல் இருக்கவே இருக்காது. அந்தளவிற்கு பட்டி தொட்டி எங்கும் கோயில்கள் தோறும் அதிகாலை வேலையில் இவரது பாடல்கள் எதிரொலிக்கும்.

ஆன்மீகவாதி, நடிகை, பாடகி என்கிற பலமுகங்கள் இவருக்கு இருந்தாலும் இவர் ஒரு தேசாபிமானியும் கூட. இறுதிவரை கதர் ஆடை மட்டுமே அணிந்து வந்த தேசியவாதி.

1907-ம் ஆண்டு கொடுமுடியில் ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்த சுந்தராம்பாளை பி.எஸ்.வேலுநாயர் என்பவர் தனது நாடகக் கம்பெனியில் பாடவைத்துக் கொண்டிருந்த சமயம்.



தீரர் சத்தியமூர்த்தி

அன்றைய பிரபல திரை நட்சத்திரமான எஸ்.ஜி.கிட்டப்பா அந்தச் சிறுமியின் தங்கக் குரலைக் கேட்டு அதிசயித்துப் போனார். மூன்று ஸ்தாயிகளிலும் நினைத்தபடி எல்லாம் பேசும் கணீர் எனும் குரல். கம்பீரமாகவும் அதே சமயம் இனிமையாகவும் உள்ள இப்பேர்ப்பட்ட ஒரு ஸ்திரீயின் குரலை அதற்கு முன் தமிழ்நாட்டு மக்கள் கேட்டதில்லை. எஸ்.ஜி.கிட்டப்பா பல எதிர்ப்புகளுக்கு இடையே 1927-ல் சுந்தராம்பாளை காதல் திருமணம் செய்து கொண்டார்.

மதுரையில் ‘வள்ளி திருமணம்’ கதா காலஷேப நிகழ்ச்சி நிகழ்த்துவதற்காக ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் வந்திருந்தார். அப்பொழுது

எஸ்.ஜி.கிட்டப்பாவின் நாடகமும் மதுரையில் நடந்து கொண்டு இருந்தது. எஸ்.ஜி.கிட்டப்பா ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதரின் சீடர் என்பதால் சுந்தராம்பாளை பாகவதருக்கு அறிமுகம் செய்துவைத்து அவரிடம் ஆசிபெறச் செய்தார்.

சில பாடல்களைப் பாடுமாறு முத்தையா பாகவதர் கேட்டுக் கொள்ளவே அவ்வளவு பெரிய மேதை முன்பு பாடத் தயங்கிய சுந்தராம்பாளை கிட்டப்பா தைரியப்படுத்தி பாட வைத்தார். பயந்தபடியே கே.பி.எஸ். பாடி முடித்தார்.

சுமார் ஒரு மணி நேரம் சுந்தராம்பாளின் பாட்டைக் கேட்டுவிட்டு கிட்டப்பாவை நோக்கி "கிட்டு... சுந்தராம்பாள் உனக்குக் கிடைத்துள்ள ஒரு பெரிய பொக்கிஷம். இப்படியொரு சாரீர வளம் இதுவரை எந்த ஸ்த்ரீக்கும் இருந்து நான் பார்த்ததில்லை." என்று ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் புகழ்ந்தார். இந்தச் சந்திப்பின்போது உடன் இருந்தவர்களுள் சுதந்திரப் போராட்டத்தியாகி சத்தியமூர்த்தியும் ஒருவர்.

இச்சம்பவமே சுந்தராம்பாளை தேசபக்திப் பாடல்கள் பாடவைக்க வேண்டும் என்ற எண்ணத்தை சத்தியமூர்த்தியின் மனதில் ஏற்படுத்தியது. இதையடுத்து கே.பி.சுந்தராம்பாள் ஏராளமான காங்கிரஸ் பொதுக் கூட்டங்களில் பாடியுள்ளார். சத்தியமூர்த்தி பொதுக்கூட்டம் அல்லது மாநாடு நடத்துகிறார் என்றால் கே.பி.எஸ். கச்சேரி இல்லாமல் இருக்காது.

எஸ்.ஜி.கிட்டப்பாவுடன் கே.பி.எஸ்.



கலைத்துறையில் மிகவும் பிரபலமாக உள்ளவர்களின் நிகழ்ச்சியை முதலில் வைத்துவிட்டு பிறகு காங்கிரஸின் கொள்கைகளை எடுத்துச் சொன்னால் கேட்பதற்கு மக்கள் திரளாக வருவார்கள் என்ற சத்தியமூர்த்தியின் திட்டம் அமோக வெற்றி அடைந்தது.

பிற்காலத்தில் ஒரு முழுமையான தேசியவாதியாகவே மாறிவிட்ட கே.பி.எஸ். மைலாப்பூர் வீதிகளில் பாட்டுப் பாடிக்கொண்டே கதர்விற்று சுதேசிக் கொள்கையை பரப்பினார் என்றும் கூறப்படுகிறது.

*1958*ம் ஆண்டு தமிழ்நாடு மேல்சபை உறுப்பினர் பதவி அளித்து அவரது சேவையை தமிழக அரசு பாராட்டியது. *1964*-ம் ஆண்டு சென்னை, தமிழ் இசைச் சங்கம் கே.பி.எஸ்ஸுக்கு 'இசைப் பேரறிஞர்' பட்டம் அளித்து கௌரவித்தது.

இந்தியச் சுதந்திரத்திற்காக தன் கலை ஆற்றல் மூலம் பாடுபட்ட கே.பி. சுந்தராம்பாள் அம்மையாருக்கு மத்திய அரசு ஏதோ ஒரு வகையில் பெருமை சேர்க்க வேண்டும்.

**– கு.வெங்கட்ராமன்**

**த**மிழ்த் திரையுலகின் முதல் 'சூப்பர் ஸ்டார்', 'ஏழிசை மன்னர்', 'கந்தர்வகான ரத்ன ஸப்தஸ்வர விஷாரத்' மாயவரம் கிருஷ்ணமூர்த்தி தியாகராஜன் (MKT) ஒரு பிறவிக் கலைஞர்.

தியாகராஜபாகவதர் என மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட எம்.கே.டி. சாஸ்திரீய சங்கீதத் தினை முறையாகப் பயின்று இசைக் கச்சேரிகள் செய்தவர்தானா அல்லது வெறும் சினிமாப் பாடகர் மட்டும்தானா என்ற கேள்வி பலரிடமுண்டு.

1939ம் ஆண்டு திருச்சி வானொலி நிலையம் துவங்கப்பட்டது. அந்த கால கட்டத்தில் பல இசை வித்வான்கள் இலக்கண ரீதியான சாஸ்திரீய சங்கீதக் கச்சேரிகளை வானொலியில் செய்து வந்தனர். இவர்களில் ஒருவராக 1940 தொடங்கி பல கச்சேரிகளை வழங்கியவர்தான் எம்.கே.டி.

# ஏழிசை மன்னர் எம்.கே.டி.



ஆலத்தூர் சகோதரர்களிடம் முறையாக இலக்கண ரீதியான சாஸ்திரீய சங்கீதம் பயின்று கச்சேரிகள் செய்யும் அளவிற்கு முழுப் பக்குவம் அடைந்தார். வானொலியில் அன்றைக்கு எம்.கே.டி.யின் கச்சேரி கேட்டுப் பரவசம் அடைந்தவர்களுக்கும் உடன் பக்க வாத்யம் வாசித்தக் கலைஞர்களுக்கும் இந்த விவரம் தெரியும், புரியும். இவருக்கு அன்றைக்கு சினிமா பிரவேசம் மட்டும் இல்லாது போயிருந்தால் சங்கீத உலகிலும் முடி சூடா மன்னராக விளங்கி இருப்பார்.

எம்.கே.டி. அவர்கள் சாஸ்திரீய சங்கீதத்தை முதலில் மதுரை பொன்னு ஐயங்காரிடமும், பிறகு ஆலத்தூர் சகோதரர்களிடமும் கற்றுக் கொண்டார். பாபநாசம் சிவன் அவர்களது நட்பு பாகவதரின் சங்கீதத்திற்கு மேலும் அழகூட்டியது.

1926ம் ஆண்டு தன்னுடைய 16வது வயதில் முதன் முறையாக சாஸ்திரீய சங்கீதக் கச்சேரியினை தந்துள்ளார். அதிலே கிடைத்த பேரும் - புகழாலும் தியாகராஜ பாகவதர் என்று அழைக்கப் படலானார்.

1934-ம் ஆண்டு அவர் சினிமாத் துறைக்கு வருவதற்கு முன் நாடக மேடைகளிலும், கச்சேரி அரங்குகளிலும் புகழ் பெற்று விளங்கினார். அவரது தோற்றப் பொலிவும், சங்கீதத்தில் உருவாக்கிக் கொண்டிருந்த தேர்ச்சியும் அவருக்கு ஆண் - பெண் என இருதரப்பு ரசிகக் கூட்டத்தை தேடித் தந்தது. இது அன்றைக்கு முன்னணி நிலையில் இருந்த அந்தத் தகுதிக்கு முயன்ற பல சங்கீதக் கலைஞர்களை பொறாமைப் பட வைத்தது உண்மை. நல்ல வேளையாக அவர் சினிமாத்துறைக்கு

இடம்மாறி இவர்களது வயிற்றில் பால் வார்த்தார் என்றே சொல்ல வேண்டும்.

சினிமாவிலும் இவர் பாடிய சுருதி சுத்தமான பாடல்கள் மூலம் கர்நாடக இசைக்கு அடித்தட்டு மக்கள் வரை ஒரு அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் திரை இசை ரூபத்தில் கர்நாடக இசை ராகங்களை கொண்டு சேர்ப்பித்தவர் எம்.கே.டி.

சினிமா மூலம் பெரும் புகழ் சேர்ந்த பின்னரும் திருச்சி வானொலி நிலையத்திலிருந்தும், அண்ணாமலை மன்றத்திலிருந்தும் வேறுபல பொது அமைப்புகளிலிருந்தும் வந்த அழைப்புகளை அலட்சியப்படுத்தாமல் சாஸ்திரீய சங்கீத நிகழ்ச்சிகளை தந்து வந்தார்.

மகான் தியாகையர், தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள், பாபநாசம் சிவன் ஆகியோர் இயற்றிய கீர்த்தனைகளையும் மற்றும் பல கவிகளின் படைப்புகளுக்கும் பிரதானம் தந்து பாடிவந்தார்.

அன்றைக்கு இன்றளவு ஒலி பெருக்கி வசதிகள் ஏற்படாத காலத்திலும் கட்டுக்கடங்காத ரசிகர் கூட்டம் கேட்டு மகிழும் அளவிற்கு தனது குரலினி மையாலும், அதிலே விஞ்சிநின்ற கம்பீரத்தாலும் தமது இசை நிகழ்ச்சிகளை வழங்கி வந்தார்.

அதுநாள்வரை நாலைந்து பவானி ஜமுக்காள விரிப்பில் அடங்கிவிட்ட கர்நாடக கச்சேரிக்கான ரசிகர் கூட்டத்தை கோவில் சுவர்கள், மரக்கிளைகள் என அமர்ந்து கேட்கும் வண்ணம் உருவாக்கியவர் எம்.கே.டி. மேனியழகும் - குரலினிமையும் ஒருசேர ஒரு கலைஞனிடம் சேர்ந்து குடி கொண்டிருந்தது எம்.கே.டி.யிடம் மட்டும்தான்.

எம்.ஜி.ஆரை எல்லோரும் நடிகர்களிலேயே மிக அழகானவர் என்பார்கள். அவரே தான் ரசிகராக பங்கேற்ற நிகழ்ச்சி ஒன்றிற்கு எம்.கே.டி. வந்தபோது 'அந்த அரங்கிற்குள் நூறு சூரியன்கள் ஒன்று சேர்ந்து ஓர் உருவில் வந்தது போல் இருந்தது" என்று பாராட்டி இருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஒரு கட்டத்திற்கும் மேல் அவர் பொதுமேடைகளில் சாஸ்திரீய நிகழ்ச்சிகளை மட்டும் வழங்க முடியாத அளவிற்கு அவரது சுதந்திரம் பறிபோனது. காரணம், இசை ரசிகர்கள் மட்டுமின்றி சினிமா ரசிகர்களும் இரண்டற கலக்கவே அவரால் இரு தரப்பினரையும் திருப்திபடுத்த முடியாத சூழல். கச்சேரி துவங்கி



பக்தவத்ஸலம்

இரண்டொரு பாடல்கள் பாடியதுமே தாங்கள் விரும்பும் சினிமாப் பாடல்களைப் பாடும்படி கோஷமாகவும், துண்டுச் சீட்டுகள் மூலமும் தொந்தரவு தர ஆரம்பிப்பர். இதனால் அவர் அவ்வப்போது நிலைதடுமாறுவது வழக்கமானது.

கச்சேரியின் ஒரு கட்டத்திற்கு மேல் இனி சமாளிக்கவோ, தாமதிக்கவோ முடியாது என்கிற சூழ்நிலை வரும் போது தான் பாடிய திரையிசைப் பாடல்களைப் பாடுவார். விசில் சத்தம் விண்ணை முட்டும்.

அதிலேயும் அவர் சில கட்டுப்பாடுகளை வைத்து இருந்தார். பக்திப் பாடல்களாக தேர்ந்தெடுத்தே பாடுவார். 'எல்லாம் சிவன் செயல்' (பவளமால்), "அம்மா மனம் கனிந்து", "உமயோர் பாகனே", "அற்புத லீலைகளை", "ஞான சபையில்", "சொற்றுணை வேதியன்", "ராஜன் மகாராஜன்", "அப்பா நான் வேண்டுதல் கேட்டறிய வேண்டும்"

இவையாவும் கர்நாடக இராகங்களின் அடிப்படையில் சம கால கவிஞர்கள் எழுதிய பாடல்கள். சாஸ்திரீயக் கச்சேரியில் பாட தகுதி

பெற்ற பாடல்களை மட்டுமே தேர்ந்தெடுத்துப் பாடுவார். தனது சினிமா ரசிகர்களை மகிழ்ச்சிபடுத்தும். அதேவேளையில் சங்கீத ரசிகர்களும் திருப்தி அடைந்தனர். சினிமா ரசிகர்களைப் பொறுத்தவரை அவர்கள் எம்.கே.டி.யை பார்க்க வந்த கூட்டம். சங்கீதம் கேட்க வந்த கூட்டமல்ல. எம்.கே.டி., "ஒரோன் ஒன்னு ரெண்டோன் ரெண்டு" என வாய்ப்பாட்டை இராகம் போட்டு பாடினாலும் விசிலடித்து கை தட்டி ரசிக்கும் கூட்டம் அது.

பாகதவர், திருச்சி வானொலி நிலையத்திலும் பல கச்சேரிகளை செய்து இருக்கிறார். அதில் ஒரு கச்சேரியில் 'கல்யாணி' ராகத்தில் நெடுநேரம் ராகம், தாளம், பல்லவி பாடி இருக்கிறார். இச் செய்தி அன்றைக்கு வெளிவந்த 'வானொலி' பத்திரிகையில் இடம் பெற்று உள்ளது. எம்.கே.டி. தமிழிசைப் பாடல்களை பிரதானமாக பாடத் துவங்கிய பின்னரும் தியாகைய்யரின் 'உபசாரமு', 'பராகு நீ கேலரா', 'நித்யரூப', 'நாதோபாஸன', 'ஏதாவுனரா', 'நகுமோ', 'தெலுசிராம', தீட்சிதரின் 'சுந்தரேஸ்வராய', 'பால கோபால', 'ஹிரண்மயீம்', 'ஸ்ரீ ஸரஸ்வதி', 'ஸ்மராம்யஹம்' ஆகிய பாடல்களையும் பாடி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸங்கீதத்துடன் ஸாஹித்யத்திற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதனை ஒரு கொள்கையாகவே வைத்திருந்தவர் பாகவதர். 'ஹரி காம்போதி ராகத்தில் அமைந்த 'ஹரி நேனெந்து வெதகுதுரா' என்ற பாடலை தியாகையர் தான் ஆராதித்து வந்த ராமர் விக்ரஹத்தை காணவில்லை என்று தெரிந்ததும் மன வருத்தத்துடன் பாடினார்.

இப்பாடலை தியாகையர் சந்தோஷமாகவோ, மகிழ்ச்சியுடனோ பாடியிருக்க வாய்ப்பே இல்லை. எனவே, இப்பாடலையோ அல்லது இத்தகைய பாடல்களையே பாடும் போது அப்பாடலின் தாத்பரியத்தை உள்வாங்கியவராகவே அப்பாடலைப் பாடுவார். இவற்றில் ஆலாபனையோ, விஸ்தாரமான ஸ்வர பிரயோகங்களோ செய்யமாட்டார். அக் கிருதியில் வாக்கேயக்காரர் என்ன உணர்வுகளை வெளிப்படுத்தினாரோ அதையே தானும் பிரதிபலித்து உள்ளத்தை தொடும்படி பாடி முடித்து விடுவார்.

மஹான்கள் எழுதிய க்ருதிகளை ஸம்பிரதாய வழக்கப்படி மேடையில் மட்டும்தான் பாட வேண்டும் என்ற கொள்கையை வைத்து இருந்தாரோ என்னவோ தெரியவில்லை. பலரின் வற்புறுத்தலையும், காட்டப்பட்ட பணம் - பெயர் - புகழ் ஆசைகளையும் புறந்தள்ளினாரே தவிர எந்தவொரு கீர்த்தனையையும் இசைத்தட்டாக வெளியிட்டதே இல்லை.

அதுபோல் எம்.கே.டி. அவர்கள் கச்சேரியில் உச்ச ஸ்தாயியில் பாடும் போதும் சரி... கஷ்டமான ராகங்களை கையாளும் போதும் சரி காயக தோஷங்கள் ஏதுமின்றி எந்தவித அங்க சேஷ்டைகளும் செய்யாமல் அநாயசமாக கடந்து போவார். அது பாண்டித்யம் பெற்றவர்களுக்கே பார்க்க பிரமிப்பா இருக்கும். அந்தளவிற்கு அவர் தன் குரல் வளத்தை தன் முழுக் கட்டுப்பாட்டில் வைத்து இருந்துள்ளார்.

இக்கால கச்சேரிகள் போல் அல்ல; அவர் காலத்தில் கச்சேரிகள் மணிக் கணக்கில்தான் நடக்கும். அத்தனை மணி நேரமும் ரசிகர்களும் ஆடாது அசையாது அமர்ந்து கேட்டு ரசிப்பார்கள். எம்.கே.டி.யின் கச்சேரி குறைந்த பட்சம் நான்கு மணி நேரமாவது நீடிக்கும். அந்த நேரத்தில் இன்று ரெண்டு சினிமா பார்த்துவிடலாம். ரயிலில் மதுரைக்கே போய்விடலாம்.

1949-ல் எம்.கே.டி. மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் நடத்திய கச்சேரியின் நேர அளவு மாலை 7 மணிக்குத் தொடங்கி நள்ளிரவு 1.30 மணிக்கு முடிவடைந்தது. ஏறக்குறைய ஆறரை மணிநேரம். இன்றைக்கு நினைத்துப் பார்க்கவே பிரமிப்பாக இருக்கும்.

இந்தக் கச்சேரியில் தான் எம்.கே.டி.க்கு முன்னாள் தமிழக முதல்வர் பக்தவத்ஸலனார் அவர்களால் 'கந்தர்வகான ரத்ன ஸ்ப்தஸ்வர விஷாரத' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

எம்.கே.டி. எவ்வளவு நேரம் பாடினாலும் அதற்குண்டான அயர்ச்சியோ, களைப்போ அவரது முகத்தில் கிஞ்சிற்றும் காண்பதரிது. கச்சேரி செய்ய வந்துள்ளாரா அல்லது முடித்துவிட்டு கிளம்புகிறாரா என அவர் முகத்தைப் பார்த்து கண்டுபிடிப்பது கஷ்டம்.

பக்கவாத்தியக்காரர்களை உற்சாகப்படுத்த அவ்வப்போது 'பலே பேஷ் பேஷ்' என்றெல்லாம் சொல்வது அவரது வழக்கம் அல்ல. நன்றாக வாசிப்பவரைப் பார்த்து மெல்ல ஒரு புன்சிரிப்பு. அதுவே அவர்களுக்கு 'சிலைன்' ஏற்றியது போலாகிவிடும். எம்.கே.டி. பாடும்போது தொடையின் மீது தாளம் போட மாட்டார். கையை சற்று மேலாக நிறுத்திவைத்து விரல்களால் அதனை நிறைவேற்றிக் கொள்வார்.




குரல் சுலபமாக பிரளவேண்டும் என்பதற்காக கச்சேரிக்கு முன்பாக சிறிதளவு கோதுமை அல்வா எடுத்துக் கொள்வது அவரின் பழக்கம். மேடையில் ஏறி அமர்ந்தவுடன் கை தட்டலும், விசிலும், ஆரவாரக் குரலும் விண்ணைப் பிளக்கும் அவை அடங்கும் வரை புன்சிரிப்போடு பொறுமை காப்பார். இதற்குள் பக்க வாத்யக்காரர்கள் தங்கள் வாத்தியங்களையும் தயார் நிலைக்கு கொண்டு வந்துவிட வேண்டும். 'போலாமா' என்பது போல் பக்க வாத்யக்காரர்கள் எல்லோரையும் புன்முறுவலுடன் முகம் பார்ப்பார். அவ்வளவுதான்; சில நொடிகளில் விமானம் 'டேக் ஆப்' ஆகிவிடும்.

அடுத்த சில மணி நேரங்களுக்கு வண்டு இன்னிசையுடன் ரீங்காரம் செய்வது போன்ற குரலால் முன்னால் இருப்பவர்கள் அனைவரும் தங்களை மறந்து எம்.கே.டி.யின் தோற்றப் பொலிவை கண் குளிர கண்டும் அவரது கந்தர்வ கானத்தை செவிநிறைவாகக் கேட்டும் இருப்பர்.

இவ்வளவு பெருமைகள் பல ஒரு சேர வாய்த்த சங்கீத சாம்ராட்டினை கர்நாடக இசை உலகம் உரிய அளவில் கொண்டாடத் தவறிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

திருச்சி வானொலி நிலையத்தில் அவர் பாடிய கச்சேரி பதிவுகளை பெற்று உலகம் கேட்டு அனுபவிக்க வழிவகை காண வேண்டும். மக்கள் நாயகனாக விளங்கிய அவருக்கு (POSTHUMOUS) மறைவிற்கு பிறகு வழங்கப்படும் உரிய அங்கீகார விருதுகளை தந்து கௌரவப் படுத்த வேண்டும்.

தமிழ் இசையின் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய அவருக்கு தமிழிசைச் சங்கம் விருதுகள் அறிவித்து அவரது நினைவினைப் போற்றும் வகையில் ஆண்டு தோறும் தன் இசைவிழாவில் ஒரு நாளை அவருக்கென அர்ப்பணிக்க வேண்டும்.

மேலும், அவர் பிறந்த மாயவரத்திலோ (இன்றைய மயிலாடுதுறை), வாழ்ந்த திருச்சியிலோ பிரதான இடத்தில் அவருக்கு சிலையொன்று நிறுவப்படவேண்டும். அவரது பெயரில் கலை தொடர்பான ஒரு உயரிய விருது உருவாக்கப்படு ஆண்டு தோறும் அவ்விருது இளம் சாதனையாளர் ஒருவருக்கு வழங்கப்படுவதன் மூலம் அவரது பெருமைகளை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லும் பணியினை தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறையும், இயலிசை நாடக மன்றமும் மேற்கொள்ள வேண்டும்.

**– மதுரை பா.சுரேஷ்**

டி.என்.ராஜரத்தினம் பிள்ளைக்கு அவரின் இறுதி நாட்களில் உடல் சுகவீனமானது. இருப்பினும், நாகஸ்வரம் வாசிக்காமல் அவர் ஒருநாள்கூட இருந்ததேயில்லை. திடீர் மாரடைப்பு டி.என்.ஆருக்கு ஏற்பட்ட போது டாக்டர். மேத்தா, டாக்டர். அருணாச்சலம் ஆகியோர் இலவசமாகவே அவருக்குச் சிகிச்சை தந்தனர். அவர் வழக்கமாக தங்கும் எழும்பூர் தாஸப்பிரகாஷ் ஹோட்டலில் வாடகை ஏதுமின்றி பல நாட்கள் வரை தங்க ஹோட்டல் முதலாளி சீதாராமராவும், மானேஜர் ஆனந்தராவும் உதவி புரிந்தனர்.

நடிகவேள் எம்.ஆர்.ராதா தனது நாடகத்தின் ஒரு நாள் வசூலை மொத்தமாக டி.என்.ஆருக்கு காணிக்கையாகச் செலுத்தினார். நகைச்சுவை மன்னன் என்.எஸ்.கிருஷ்ணனும், டி.ஏ.மதுரமும் பலவகைகளிலும் டி.என்.ஆருக்கு உதவ படாதபாடுபட்டனர். கணக்கிலடங்காத இசை அன்பர்களும் தங்களால் முடிந்த அளவிற்கு உதவிகள் புரிந்தனர். இவர்களில் எவர் ஒருவரும் “சம்பாதிக்கிற காலத்தில் இப்படி இருந்தாரே அப்படி வாழ்ந்தாரே” என எண்ணவில்லை. மாறாக; ஒரு அற்புதக் கலைஞனின் வாசிப்பிற்கு உடல் நலம் இடையூறாக அமைந்துவிட்டதே என ஆதங்கப்பட்டனர். சங்கீத உலகில் கலா ரசிகர்களின் தனிப்பட்ட அன்பைப் பெற்ற இப்படியான ஒரேயொரு கலைஞர் கூட இன்று நம்மிடையே இல்லையே ஏன்? யோசிப்போமா!...

இருந்தபோதிலும், டி.என்.ஆர். அன்பாளர்களின் இத்தகைய உதவிகள் அனைத்தையும் இடைஞ்சலாகவே கருதினார். காரணம், இவர்கள் அனைவருமே மருத்துவர்களின் ஆலோசனைப்படி கொஞ்சகாலம் நாகஸ்வரத்தை வாசிக்காமல் டி.என்.ஆர். முழு ஓய்வு எடுத்துக் கொள்ளும் படி வற்புறுத்தியதுதான். இத்தகைய கட்டுப்பாட்டினை வலியுறுத்துவோர் தரும் உதவிகளை கூட நிராகரித்து அவர்களை சந்திக்காமல் ‘டிமிக்கி’ கொடுத்தார் டி.என்.ஆர். ஆனால், கடைசி வரை நாகஸ்வரத்தை வாசிப்பதை மட்டும் கைவிடாமல் பிடிவாதமாக இருந்தார். போய்ச் சேர்ந்தார்.

பிடில் கோவிந்தசாமிப்பிள்ளை வித்வான்களில் பிரபுவாகத் திகழ்ந்தவர். பெருந்தன்மைக்கு உதாரண புருஷர். தன் வித்வத்துக்கும் - தனக்கும் கிடைக்கும் கௌரவத்தையே முதன்மையாக மதிப்பார். பணத்துக்காக எந்த வகையிலும் தன் சுய மதிப்பினை, கௌரவத்தை அடகு வைக்க முன்வரமாட்டார்.

காக்கிநாடா சூர்ய நாராயண மூர்த்தி நாயுடு, பிக்ஷாண்டார் கோவில் ஆவுடையப் பிள்ளை, மருங்காபுரி ஜமீன்தார், விஜய பூச்சிய நாயக்கர், சேத்தூர் ஜமீன்தார், சேவுக பாண்டியத் தேவர் போன்ற பிரபுக்கள், நிலக்கிழார்கள், தனவந்தர்கள், ஜமீன்தார்கள் ஆகியோர் பிள்ளை மீது பற்று மிகக் கொண்டவர்கள்.

தனது ஐம்பது வயதிற்கு மேல் பிள்ளை உடல் அசௌக்கியம் அடைந்தார். முன் போன்று கச்சேரிகள் செய்ய இயலவில்லை. பொருளாதாரத்திலும் நலிவுற்றார். இத்தகவல் தெரிந்ததும் மேற்சொன்ன தனவந்தர்களான அவரின் நண்பர்கள் மனச் சங்கடப்பட்டனர். நண்பர்கள் மட்டுமின்றி நண்பர்களது வீட்டுப் பெண்மணிகளும் பிள்ளைவாளுக்கு இந்த நேரத்தில் உதவிடுவது நமது கடமை என எடுத்துக் கூறினர்.

ஒவ்வொருவரும் கணிசமான தொகையினை நேரிலும், நம்பிக்கைக்கு உரியவர்கள் மூலமும் பிள்ளையிடம் சமர்ப்பித்தனர். ஆனால், பிள்ளை அவர்கள் தன் சிரமம் மற்றவர்களுக்குத் தெரிந்துவிட்டதே என்றுதான் வருத்தப்பட்டார்.



# இல்லாமையிலும் இசைபட வாழ்ந்தோர்...

“தன்னால் சமாளிக்க இயலாத அவசியத் தேவை வரும்பட்சத்தில் இவற்றை பெற்றுக் கொள்ள பெருந்தன்மையுடன் அனுமதித்து; இப்போதைக்கு இத் தொகையினை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்” என நயமாக ஒவ்வொருவரிடமும் சொல்லி அனுப்பினார்.

தனது தேவைகள் அனைத்தையும் முன்பிருந்த நிலையிலிருந்து வெகுவாகச் சுருக்கிக் கொண்ட பிள்ளை அவர்கள், தன் ஈமக்கிரியைகளுக்குக் கூட குடும்பத்தார் யாரிடமும் சென்று உதவி பெற்று விடக்கூடாது என்பதற்காக முன்னதாகவே அதற்கென்று ஒரு தொகையினையும் ஒதுக்கி வைத்தார்.

எல்லா முனைகளில் இருந்தும் நட்புணர்வுடன் ஆதரவுக் கரங்கள் வேண்டும் வேண்டாமென நீண்ட போதும் சுயமரியாதையால் விளைந்த அன்பால் அவற்றை எல்லாம் தவிர்த்து தன் கடைசி நாள்வரை யாருடைய உதவியின் தேவை இன்றி 1931-ம் வருடம் மார்ச்-15ம் தேதி தஞ்சாவூரில் காலமானார் பிடில் கோவிந்தசாமிப் பிள்ளை.

இப்படிப்பட்டவர்களிடம் கற்றுக் கொள்ளவேண்டியது வித்தை மட்டுமல்ல; வாழ்க்கையினை வாழும் முறையினையும்தான்.

**கா**ஞ்சீபுரம் நாயனாப் பிள்ளையின் இறுதி நாட்கள் மிகவும் சிரமம் நிறைந்தவை. பணமுடை அதிகம். பிள்ளையின் நலனில் மன்னார்குடி மிராசுதாரர் கருப்பையா முதலியாருக்கு அக்கறை அதிகமுண்டு. பணமாகக் கொடுத்தால் பிள்ளை மறுத்து விடுவார். மேலும், தன்னைப் பற்றின தவறான அபிப்பிராயம் கொண்டு நட்பில் சேதாரம் வந்துவிடக் கூடாது என பயந்த முதலியார் ராமனைப் பற்றிய கீர்த்தனைகளை மட்டும் தொகுத்து நாயானாப் பிள்ளையை பாடச் சொல்லி பலமான சன்மானம் தரத் திட்டமிட்டார். ஆனால்; “ஸ்வரம் பாடாமல் கீர்த்தனைகள் மட்டும் பாடுவது ராமார்ப்பணமாகாது” என்று சொல்லி மறுத்துவிட்டார் நாயனாப் பிள்ளை.


நாயானாப் பிள்ளை



இது போலவே, மைசூர் சௌடையாவும், புதுக்கோட்டை தட்சிணாமூர்த்திப் பிள்ளையும் நாயனா பிள்ளைக்குப் பொருள் உதவிட ஒரு யோசனை செய்தார்கள். தாங்கள் இருவரும் பக்கவாத்தியம் வாசிக்க பிள்ளையவர்களை பாட வைத்து ‘ரெக்கார்ட்’ கொடுக்க சகல ஏற்பாடுகளையும் முடித்துவிட்டு அவரிடம் போய் தகவல் தந்தார்கள்.

நாயனாப் பிள்ளையோ தனது வறுமையையோ - இல்லாமையையோ கொஞ்சமும யோசியாமல் “நீங்கள் இருவரும் என் நிலைமை உணர்ந்து உதவ மிகுந்த பிரயாசைப்பட்டு இருக்கிறீர்கள். அதற்கு என் நன்றி. ஆனால், ‘ரெக்கார்ட்’ செய்வதால் சங்கீதத்தினை நேரம் காலத்திற்கு ஏற்ப சுருக்கவும் - பெருக்கவும் நேரிடும். இது என் குருநாதர் என்னிடம் பெற்ற ஆக்ஞைக்கு விரோதமான காரியம். மன்னிக்கவும். என்னால் இதில் சிக்க முடியாது. பணம் வரும்தான். ஆனால், மனம் என்னை சும்மா விடாதே....” என்று சொல்லி மறுத்துவிட்டாராம் நாயனாப் பிள்ளை. நமது பாரம்பரிய சங்கீதம் இத்தனை காலம் அனைத்து வகை கலாசார படையெடுப்புகளையும் தாண்டி தாக்குப்பிடித்து நிற்கிறதென்றால் அது வெறும் அச் சங்கீதத்தின் மகிமையால் மட்டுமல்ல; இதுபோன்ற மகா கலைஞர்களின் மகோன்னத வாழ்க்கை முறையாலும் தானே...!

– **R.G. சுஜெய் சேதுபதி. சிதம்பரம்.**



# சாரநாதனுக்கே சறுக்கல்

**செ**ல்போன் மணி ஒலித்துக் கொண்டிருந்தது..

“யார் பேசறா... யாரு வேணும்?”

“நா... விஜில் சுந்தரேசன் பேசறேன். சாரநாதன் சார் இருக்காரா? அவர்கிட்ட கொஞ்சம் பேசணும்.”

“எப்படி சார் இருக்கீங்க? சாரநாதன்தான் பேசறேன். என்ன விசேஷம் சொல்லுங்க சுந்தரேசன் சார்.”

“ஓ.. நீங்களேதானா?.. ஒன்னுமில்லே... நம்ம பத்திரிகையிலே உங்க கச்சேரியை ரெவ்யூ பண்ணியிருந்தேனே படிச்சுப் பாத்தீங்களா?

பாடகர் சாரநாதனுக்கு திடீர் குழப்பம். இவருக்கு என்ன பதில் சொல்வது? இப்போதைக்கு ஏதாவது சொல்லி சமாளிப்போம் என யோசித்தவர்...

“வெள்ளிக்கிழமை பேப்பர்லதானே பார்த்தேன். படிச்சேன். அது விஷயமா நானே ஒங்ககிட்ட பேசணும்னு இருந்தேன். முக்கியமானவா ஆத்துக்கு வந்துருக்கா.. அப்புறம் கூப்பிடட்டுமா.. சாரி.”

**சா**ரநாதனுக்கு கடந்த வாரத்தில் நடந்த அந்த கச்சேரி நிகழ்ச்சிகள் கண்முன்னே ஓட ஆரம்பித்தன. மனசு படபடத்தது.

கோதண்டராமர் கோவிலுக்கு எதிரே பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்த அந்தப் பந்தல் அர்ஜுனன் சரக்கூடு போல இரவைப் பகலாக்கும் குழல் விளக்குகள். நூல் பிடித்து டிசைன் செய்தார் போல வரிசை வரிசையாய் நாற்காலிகள். ஸ்ரீராமநவமி இசை விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வந்தது.

இன்று நேற்றல்ல... தொடர்ந்து இருபது வருஷமா இவ்விழா நடைபெற்று வருகிறது. இதில் வாய்ப்பு கிடைப்பதை இளம் கலைஞர்கள் பெரும் பேறாக கருதினர். மூத்த கலைஞர்களோ தங்களுக்குக் கிட்டும் மரியாதையாகவே வரவேற்று வந்தனர். அதுமட்டுமல்ல; தங்களுடைய முழுத் திறமையும் வெளிப்படும் வகையில் நிகழ்ச்சிகளை தருவர். காரணம், அத்தனை முன்னணிப் பத்திரிகைகளின் இசை விமர்சகர்களும் முன் வரிசையில் இடம் பிடித்து இருப்பர் என்பதுதான்.

## நாதமெனும் போதினிலே...

**நா**தசுரம் வாசிப்பதிலே இரண்டு வழிகள் உண்டு. ஒன்று ஜனரஞ்சகமான நேர்வழி. மற்றொன்று கரடு முரடான விவகாரமான வழி.

மதுரை பொன்னுச்சாமிப் பிள்ளை, டி.என்.ராஜரத்தினம் பிள்ளை, திருவிடைமருதூர் வீருசாமிப் பிள்ளை, குளிக்கரை பிச்சையப்பா பிள்ளை போன்றவர்கள் நேர்வழி.

செம்பொன்னார் கோவில் சகோதரர்களான ராமசாமிப்பிள்ளை, கோவிந்தசாமிப் பிள்ளை, தட்சிணாமூர்த்திப்பிள்ளை, சிதம்பரம் வைத்தியநாதப் பிள்ளை, திருமெஞ்ஞானம் டி.பி.நடராஜசுந்தரம் பிள்ளை போன்றவர்கள் கரடு முரடான விவகாரமான வழி.

இவை இரண்டும் இல்லாத தென்றல் காற்று போன்ற தனக்கென்று தனி வழியை அமைத்துக் கொண்டவர் ‘திருவெண்காட்டார்’ எனப்படும் டி.பி.சுப்பிரமணியப் பிள்ளை (டி.பி.எஸ்).



திருவெண்காட்டார்

முதல் இரண்டு வழிகளிலுமே நாபிக் கமலத்திலிருந்து காற்றை வெளிக் கொண்டு வந்து உரியபடி வாத்தியத்திற்குள் செலுத்தி வெளிவரச் செய்கையில் பல வகையில் உடம்பை வருத்திக் கொள்ள வேண்டிவரும்.

ஆனால், திருவெண்காட்டாரோ உடம்பை ஆட்டாமல், அசைக்காமல் வாசிக்கிறாரா? அல்லது வாசிப்பது போல் பாவனை செய்கிறாரா? என்று சந்தேகப்படும் அளவிற்கு உதட்டளவிலேயே அசகாயமாக வாசித்து ரசிகர்களை மெய்மறக்கச் செய்தவர்.

**– அமரர் மதுரை எம்.பி.என்.சேதுராமன்**



குளிக்கரையார்

**அ**ன்றுதான் விழாவின் நிறைவு நாள். அவ்வருட ஸ்ரீராமநவமியின் உற்சவ காலத்திற்கான உசத்தியான கச்சேரியாக சாரநாதனின் கச்சேரிக்கு விழா நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்றைய நிகழ்ச்சியின் உபயதாரர் ஊரின் மிக முக்கியப் புள்ளி. சாரநாதனைப் பொறுத்தவரை ஒரு அபூர்வமானப் பாடகர். அட்ஸர ஸுத்தம், அர்த்த பாவம், ஆலாபனையில் புதுப்புது யுக்திகள், ஸ்வர பிரஸ்தாரத்தில் நெளிவு சுளிவான கோர்வைகள் இப்படியாக சாரநாதனின் தனிப்பட்ட இசை மேன்மைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

“கச்சேரிக்கென்று விசேஷ சாதகமோ, திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலோ என்னிடம் கிடையாது. அந்தந்த வேளையில், சூழ்நிலையில் என்ன தோன்றுகிறதோ அந்தந்த கிருதிகளைப் பாடிட்டுப் போறேன். கச்சேரிகள் பக்காவாக அமைவது என்பதற்கு நான் உரிமை கோர முடியாது. அது பகவத் அனுக்கிரகம்.” இவ் வாசகம் அவரது எல்லா பேட்டிகளிலும் கண்டிப்பாக இடம்பெற்று இருக்கும். ‘இது வெறும் வார்த்தைகளோ, தன்னடக்கமோ அல்ல. அவரின் ஆழ்மனது சத்தியவாக்கு என அவரது ரசிகர்களும் நம்பத்தான் செய்கிறார்கள்.

வருகின்ற வாய்ப்புகளை எல்லாம் சன்மானத்தைக்கருதி சகட்டு மேனிக்கு ஒப்புக் கொள்பவர் அல்ல சாரநாதன். அதுவும் அறுபது வயதினைக் கடந்த பின்னர் சச்சேரிகளை வெகுவாகச் சுருக்கிக் கொண்டுவிட்டார். அத்திப் பூத்தார் போல் தான் நகரில் அவரது இசை நிகழ்ச்சி. எனவே, எதிர்பார்ப்புகள் ஏகமாய் எகிறி எல்லாமும் ‘ஹவுஸ் புல்’ கச்சேரிகள்தான். இவரின் ரசிகர்கள் எல்லோராலும் பணம் செலவழித்து கச்சேரி கேட்க இயலாது. அப்படியானவர்கள் குவிவது இதுபோன்ற கோவில் சார்ந்த ஆன்மிக நிகழ்ச்சிகளில்தான்.

சாரநாதன் மேடையேறினார். பக்காவான பக்க வாத்தியங்கள். கூட்டமோ கூட்டம். சபை வணக்கம் செய்துவிட்டு நாலாபக்கமும் ஒரு நோட்டம் விட்டார். ரசிகர்களின் உற்சாகம் அவர் உள்ளத்தில் இன்பக் கிளர்ச்சியை ஏற்படுத்திய அதே நேரம் அவரின் பொறுப்புணர்ச்சியையும் தட்டி எழுப்பிட தவறவில்லை.

“இறைவா கச்சேரி திருப்திகரமாக அமைய அருள் செய்” என்கிற வழக்கமான பிரார்த்தனையோடு ‘ஸரஸுரிட்’ என்கிற சாவேரி வர்ணத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது எடுப்பாகவே அமைந்தது ஆரம்பம். அடுத்து இரண்டு மூன்று கிருதிகள் சிட்டையாய் ஆலாபனை இல்லாமல் கனராகத்திற்கு முன்னோடியாக....

“அடபாவமே, இதென்ன சோதனை?” நடுநடுவே செறுமல்கள். இருமல்வேறு. சரி சரி, போகப் போக சரியாகிவிடும்” என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டு முக்கிய ராகமாக பூர்வி கல்யாணியை எடுத்துக் கொண்டார். குரல் வளம் அன்று அத்தனை சிறப்பாக இல்லை என்று உணர்ந்து கொண்டவர் சற்று எச்சரிக்கையாகவே ராகம் பாடத் தொடங்கினார்.

மந்தர ஸ்தாயியில் மூச்சுதான் இழைந்தது. மேல் சஞ்சாரத்திலும் சாஹசம் காட்ட முடியவில்லை. அனாயாசமாக உதிர்க்கும் பிருகாக்கள் எல்லாம் எங்கே போயின? மனதளவில் சிறகடித்து பறக்கும் கற்பனைகளை குரல் வழி வெளிப்படுத்த முடியாதபடி விளிம்பு கட்ட வேண்டியதாகிறதே.

ஒருவேளையாக... இடைவேளை. பாடகரின் அருமை பெருமைகளை, சாதனைகளை பற்றி விழா கமிட்டித் தலைவர் விலாவாரியாக சிலாகித்துப் பேசினார். ரசிகர்களின் கரகோஷம். சாரநாதனுக்கு மட்டும் எல்லாமும் இன்றைக்கு சம்பிரதாயமாகவே பட்டது. உள்ளம் வெளியில் நிலவும் குளிரையும் தாண்டி புழுங்கிக் கொண்டு இருந்தது.

இந்நிலையில் சாரநாதனை ஒரு சில வார்த்தைகள் பேசும்படி அழைப்பும் வந்தது. பாட்டுதான் வரவில்லையே தவிர பேச்சு நன்றாகவே அமைந்தது. விழாக் குழுவினரின் சிரத்தை, ரசிகர்களின் ஈடுபாடு, பக்க வாத்யக்காரர்களின் பங்களிப்பு எல்லாவற்றையும் குறிப்பிட்டு பேசியவர்க்கு தனது அன்றைய இயலாமை குறித்து ஏனோ சொல்லிட மனம் ஒப்பவில்லை. சற்று கூனிக் குறுகியே பேசி அமர்ந்தார் சாரநாதன்.

அந்த பிரபல வித்வான் தன் வீடு தேடி வருவதா? கலை விமர்சகர் சுந்தரேசனுக்கு ஆச்சர்யம். அதிர்ச்சி. இரண்டுமே ஏக காலத்தில். கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை என்பார்களே அந்த நிலை. “இவரைப் பற்றி நல்லாதானே எழுதி இருந்தோம். பின் ஏன்?” என்ற பற்பல சிந்தனை சுந்தரேசனுக்கு.

“வரணும் வரணும்” என்று வந்தவரை வரவேற்றார். “ஐயா... ஒரு போன் செய்திருந்தால் நானே வந்திருப்பேனே... உங்களுக்கு ஏன் சிரமம்” என வாய் சொன்னாலும் சுந்தரேசன் சார் வீட்டிற்கு சாரநாதன் வந்திருப்பது அடுதத சில நொடிகளில் அக்ரஹாரம் முழுவதும் பரவியது. வெளியில் ஏகப்பட்ட மடிசார் மாமிகளின் தலைகள் தென்பட ஆரம்பித்தது. அந்த வகையில் சுந்தரேச னுக்கு உள்ளூர ஒரு பெருமைதான்.

“அதனாலென்ன?” என்று சிரித்தவாறே பேச்சைத் தொடங்கினார் சாரநாதன். “ஸ்ரீராமநவமி கச்சேரி பற்றின உங்க விமர்சனத்தை படித்தேன். நன்றாகவே எழுதியிருந்தீங்க.. ஆனா...” என்று சற்றே வார்த்தை வெளிப்பாட்டினை நிறுத்தவும் பதறிய சுந்தரேசன் “ஏன்... ஏதாவது தவறாகச் சொல்லிவிட்டேனா?” என்றார்.

“சே... சே... அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. அப்படியே சொன்னாலும் ஒரு விமர்சகரா அந்த உரிமை உங்களுக்கு பரிபூரணமா இருக்கு. நான் ஒன்னும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவன் இல்லையே. நான் சொல்ல வந்தது என்னென்னா... என் மேல உங்களுக்கு ஒரு

**தா**னம், யாகம், ஜபம் முதலியன செய்தல் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பலன்களை மட்டுமே அளிக்கவல்லவை. ஸங்கீதம் ஒன்று மாத்திரமே தர்மம், அர்த்தம், காமம், மோதம் என்ற நான்கு விதமான புருஷார்த்தங்களையும் அளிக்கக் கூடியது.

- சிவபுராணம்.

**பொ**ருளை உணர்ந்த பாடலே யோகமாக ஆகி அதனால் மனோலயம் ஏற்பட்டு அந்த யோகத்தினாலேயே பரம் பொருளை அடைய முடியும்.

- ஸீத ஸம்ஹிதை

**ப்**ரம்மா, விஷ்ணு, மகேசன் மூவரும் நாத வடிவினர்களே. ஆகையால், நாதத்தினை உபாஸிப்பவர்கள் இம் மூவரின் அம்சத்தினைப் பெற்றவராகிறார்கள்.

- சங்கீத ரத்னாகரம்

**த**மிழகத்தின் முதல் சூப்பர் ஸ்டார் எம்.கே.தியாகராஜ பாகவதர், முழுவதும் கர்நாடக இசை சாகித்யங்களை வைத்து ஒரு திரைப்படத்தை தயாரிக்க வேண்டும் என்று மிகவும் ஆவலுடன் இருந்தார். ஆனால், அது அவரின் கடைசிக் காலம் வரை நிறைவேறாமலேயே போய்விட்டது.

● ● ●

தனி அபிமானம் உண்டு. அதனால அன்றைய என் கச்சேரியை தரத்தினை அளவுகோலாகக் கொண்டு விமர்சிக்காம அன்பின் அடிப்படையில் ஒரேயடியா புகழ்ந்து தள்ளிட்டீங்க...

“சாரநாதன் என்னதான் சொல்ல வருகிறார் என்பது சுந்தரேசனுக்கு புரிந்தும் புரியாமல் போனது.

அன்றைய கச்சேரியில் நான் பாடிய பூர்வி கல்யாணியை ரொம்ப ஒசத்தியா எழுதி இருக்கீங்க... மனப்பூர்வமா சொல்லுங்க! அன்னைக்கு அந்தளவிற்கா நான் பாடினேன். சொல்லுங்க சுந்தரேசன்...?

குற்றவாளி கூண்டில் நிறுத்திக்கேட்பது போல் கேட்டதால் சுந்தரேசனுக்கு வார்த்தைகள் வரவில்லை. “அது வந்து... வந்து...”


“எனக்கே அன்று என் கச்சேரி சுவாரஸ்யப்படலே... மேடையிலே பேசும்போது அதனை நான் சூசகமா குறிப்பிட்டும் இருக்கேன். நேற்று ஒரு ரசிகர் போன் பண்ணினார். “என்னமா இருக்கும் உங்க பூர்வி கல்யாணி.. அடேயப்பா! அதற்காகவே அன்றைக்கு வெளியூரிலிருந்து வந்தேன். அன்னைக்குன்னு ஏங்க குரல் சற்று மக்கர் பண்ணிடுத்து. ஆனாலும் சமாளிச்சிட்டீங்க” என்றார். என்னை சந்தோஷப் படுத்தறதுக்காக தூக்கி வச்சு பேசலையே... அவரும் என் ரசிகர்தான். நீங்களும் ரசிகர்தான். இன்னும் ஒரு படி மேலன்னு கூட சொல்லலாம். என்னை காயப்படுத்திவிடக் கூடாதுன்னு நெனச்சி ஒங்க விமர்சனத்திற்கென்று உள்ள நல்ல பெயரை கறைபடுத்திக்காதிங்க சுந்தரேசன்.

என்னை எத்தனையோ தடவை காரசாரமா விமர்சித்து இருக்கிறார்கள். அதைஎல்லாம் நான் அடுத்தடுத்து சரிபண்ணிகிட்டு வந்ததாலேதான் இன்னைக்கு இவ்வளவு பெரிய கலைஞனா வந்து இருக்கேன். அவர்கள் எல்லாம் என்னை காயப்படுத்தல. வளர்த்து விட்டுருக்காங்க என்பதுதான் உண்மை.” என்று சொல்லி எழுந்த சாரநாதனை வீட்டு வாசலின் இரு பக்கமும் நின்ற தெருவாசிகள் மத்தியில் பத்திரமாக வழிஅனுப்பிவிட்டு வந்த விமர்சகர் சுந்தரேசன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டது.

“எல்லா வகையிலுமே இவர் வித்தியாசமானவர்தான்”

**– தி. ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன்.**

# இறைவனுக்கு பாடிப் பணிசெய்தவருக்கு பத்மஸ்ரீ விருது!



**த**ஞ்சை மாவட்டம், திருக்கருகாவூரின் அருகிலுள்ள ஆலத்தூர்தான் நமது 'கவர் ஸ்டோரி' நாயகரான பத்மஸ்ரீ திருத்தணி சுவாமிநாதன் அவர்களது பிறந்த ஊர். இவர் வைணவக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் சைவத்தின்பாலும், சிவத்தின் மீதும் ஒரு இனம் புரியாத ஈர்ப்பு இளம் பிராயத்திலேயே இவருக்கு ஏற்பட்டது.

அருளாளர்களால் அருளப்பட்ட 'தேவாரம்' மீது நாட்டம் அதிகமானது. அதிலும் 'திருவாசகம்' இவருக்கு மிகவும் பிடித்தமானதொன்றாக அமைந்தது. ஊருக்கு அருகே உள்ள பாபநாசம் பெருமாள் கோவிலின் தீவிர பக்தரான தனது குடும்பத்தில் தன் மகனோ சிவ மார்க்கத்தில் முனைப்பும், ஆர்வமும் கொண்டிருப்பது கண்டு சுவாமிநாதனின் தந்தையார் நாகரத்தினம் மகிழவே செய்தார்.

சுவாமிநாதனுக்கு அப்போது ஏறக்குறைய ஏழு வயது இருக்கும். தங்கள் அருகாமை ஊரான பாபநாசம் ஆலய ஆடி உற்சவத்திற்காக பாடகர் மதுரை சோமுவின் கச்சேரிக்கு ஏற்பாடாகி இருந்தது. இது சோமுவின் மாமனார் ஊராம். (கூப்பிட்டா வராம இருக்க முடியுமா என்ன?) தன் மகன் சுவாமிநாதனை மதுரை சோமு முன்பு நிறுத்தி அவனது இசை ஈடுபாட்டினை விவரித்து இருக்கிறார் தந்தை நாகரத்தினம்.

சோமு; சிறுவனான சுவாமிநாதனை பாடச் சொல்லி கேட்டு இருக்கிறார். அந்த நேரத்தில் தனக்கு மிகவும் பிடித்தமான, பரிச்சயமான பாடலான 'சிந்தனை செய் மனமே' பாட்டை பாடிக் காண்பித்துள்ளார். இயல்பில் பக்தியில் ஈடுபாடும், இயற்கையில் நல்ல குரல் வளமும் இருப்பதால் தேவார பாடசாலை ஒன்றில் சேர்த்து விடும்படி ஆலோசனை தந்துள்ளார் சோமு ஐயா. 1954ம் ஆண்டின் அந்த நாளை இன்றைக்கும் நினைவு கூர்கிறார் சுவாமிநாதன். "சோமு ஐயா கச்சேரிய கேட்க போகிறவர்கள் கருக்கலில் (பொழுது விடிய) வந்துடறேன் என்றுதான் வீட்டில் சொல்லிவிட்டுச் செல்வார்களாம். அந்தளவு விடிய விடிய பாடுவார். அன்றைக்கும் அதிகாலை 3 மணி வரை பாடினார். அதன் பின்தான் எங்கள் சந்திப்பு பிரம்ம முகூர்த்தத்தில் நடந்தது" என்கிறார்.

இதன்படி, திருக்கடவூர் தேவாரப் பாட சாலையில் ஐந்தாண்டுகள். அதைத் தொடர்ந்து தருமபுர ஆதின பாடசாலையில் மேலும் இரண்டு ஆண்டுகள். இங்கே இவருக்கு ஆசானாக அமைந்தவர் தருமபுரம்

சுவாமிநாதன். இவரிடம், தான் கற்றுக் கொண்டதும், பெற்றுக் கொண்டதும் தான் இன்றைய எனது உயர்விற்கு அடித்தளம் என்கிறார் மாணவரான சுவாமிநாதன்.

பொதுவாக, இளமைப் பருவத்தில் இளைஞர்களிடம் தலைகாட்டும் பொழுது போக்கு அம்சங்கள் மீதான ஈடுபாடு ஏதும் சுவாமிநாதனிடம் காணப் பெறவில்லை. தேவாரப் பாடல்கள் மீதான ஆராய்ச்சியும், அது தொடர்பான பயிற்சிகளுமே இவரை அந்த வயதிலும் முழுமையாக ஆக்ரமித்து இருந்தன. அதன் வெளிப்பாடாக வைணப் பெயராக இருந்த தனது இயற்பெயரான சாரங்கபாணி என்பதனை சைவப் பெயரான சுவாமிநாதன் என மாற்றி அழைத்துக் கொண்டார்.

தனது 17வது வயதில் குன்றக்குடி ஆதினத்திற்குச் சொந்தமான தேவகோட்டை ஆலயத்தில் மாதம் 75 ரூபாய் சம்பளத்தில் ஓதுவாராக பணி அமர்த்தப்பட்டார். அடுத்து லால்குடி அருகிலுள்ள திருமங்கலத்தில் மாதம் ரூ. 125 மற்றும் 2 கலம் நெல் என்கிற ஊதிய அடிப்படையில் பணியிட மாற்றம் செய்தார். இதனைத் தொடர்ந்து 1975-ல் திருத்தணி முருகன் ஆலயத்தில் தகுதி அடிப்படையில் மாதம் 750 ரூபாய் சம்பளத்தில் பணி வாய்ப்பு பெற்றார். இதன் வழி ஆலத்தூர் சாரங்கபாணி 'திருத்தணி சுவாமிநாதன்' ஆனார். இங்கிருந்து ஓய்வு பெற்ற பிறகு சிதம்பரத்திலுள்ள வி.எஸ்.டிரஸ்ட் பாடசாலையில் தேவார ஆசிரியரானார். கடந்த பத்தாண்டு காலமாக தான் பயின்ற தருமபுர ஆதின பாடசாலையில் தன் குருவின் பணிகளை தான் சிரமேற்கொண்டு செய்து வருகிறார்.



ஏராளமான வழித்தோன்றல் மாணவர்களை உருவாக்கி அவர்கள் வழி தேவாரத்தின் மகிமையை அடுத்தடுத்த தலைமுறைக்கும் கிஞ்சிற்றும் சேதாரமின்றி மரபு மாறாது கடத்தி இருக்கிறார்.

அகில இந்திய வானொலியின் 'ஏ' கிரேடு ஆர்டிஸ்டான சுவாமிநாதன் தேவாரம் தொடர்பாக 50க்கும் மேற்பட்ட ஒலி-ஒளி நாடாக்களை வெளியிட்டு உள்ளார். தமிழக அரசின் 'கலைமாமணி' மற்றும் 'திருமுறை கலாநிதி' 'பன்னிசை பேரறிஞர்' 'திருமுறை இரத்தினம்' ஆகிய விருதுகளை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பெற்று உள்ளார். தென்னாப்பிரிக்கா, சிங்கப்பூர், சுவீட்சர்லாந்து மற்றும் இலங்கை உள்ளிட்ட நாடுகளிலும் திருமுறை நிகழ்ச்சிகளை தந்துள்ளார்.

"17 வயதில் தொடங்கிய எனது இறைபணி வாழ்க்கை இன்றுவரை தேவாரப் பாடல்களை மையமாகக் கொண்டே இயங்கி வருவது இறைவன் எனக்களித்த பாக்கியம். பாடுவதற்கான குரல் இருக்கும் வரை என் இறைபணி தொடரும். அடுத்த தலைமுறை ஓதுவார்களை உருவாக்குவ தன் மூலம் நான் ஆசிர்வதிக்கப்பட்டவனாகவே நினைக்கிறேன்.

இப்போது கிடைத்துள்ள மத்திய அரசின் 'பத்மஸ்ரீ' விருதும் கூட அதற்கான அங்கீகாரமாகவே கருதுகிறேன்" என்கிறார் திருத்தணி சுவாமிநாதன்.

இவ்விருது அவருக்கு மட்டுமல்ல; சைவத்திற்கும் - தமிழுக்கும் - ஓதுவார்களுக்கும் என பன்முகத் தன்மையில் பெருமைக்குரிய ஒன்றே!

**– எஸ்.பிரபு**



# நாதயோகி

– இசை ஆய்வாளர் அச்சுதானந்தன்

**க**ர்நாடக மாநிலத்தில் தலைக்கோட்டை போர் நடந்த போது, அம் மாநிலத்தை விட்டு குடி பெயர்ந்து தமிழகத்தில் அடைக்கலம் அடைந்தவர் பலர். அவர்களில் 1742-ல் தீட்சிதரின் தந்தை வழி பாட்டனார் (தீட்சிதரின் தந்தையான ராமசாமி தீட்சிதருக்கு 7 வயது இருக்கும் போது) ‘மத்யார்ஜூனபுரி’ என்று சிறப்புடன் அழைக்கப்பட்ட தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிடை மருதூர் எனும் ஊருக்கு வந்தார். அதன் பின்னர், தந்தை ராமசாமி தீட்சிதர் காலத்தில் அவர் தன் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு திருவாரூரில் வந்து குடியிருந்தார்.

நமது சங்கீத நாயகன் முத்துசாமி தீட்சிதர் 25.3.1775-ல் (மன்மதவருடம், சித்திரை மாதம், கிருத்திகை நட்சத்திரத்தில்) பிறந்தார். அன்று வசந்த நவராத்திரியின் ஆரம்ப நாளாகும்.

ஆரம்ப காலத்தில் தன் தந்தையிடம் இசையினை முறையாகப் பயின்று பின்னர் ஆண்டவன் அருளால் தாமே



சுயமாகக் கிருதிகளை அமைத்துப் பாடலானார்.

பருவத்தில் திருமணம்நடந்தது. முதல் மனைவி கருப்பாக இருந்ததால் அவர் தாம்பத்ய வாழ்க்கையில் முழு ஈடுபாட்டுடன் இல்லை என்று கருதிய பெற்றோர் நல்ல அழகுள்ள மங்கையை இரண்டாம் திருமணம் செய்வித்தனர். அப்போதும், தீட்சிதர் குடும்ப வாழ்வில் முழு ஈடுபாட்டுடன் இன்பமாக இருந்தார் என்று சொல்வதற்கில்லை.

சிதம்பரம் நாதயோகி என்பவரிடம் ராமசாமி தீட்சிதர் சில மந்தர உபதேசங்களைப் பெற்று இருந்தார். தான் பெற்ற இன்பம் தனது மகன் முத்துசாமி தீட்சிதரும் பெற வேண்டும் என்று கருதியவர் தனது எண்ணத்தினை தன் குருநாதரிடம் கூறினார். அவரும் சம்மதித்தார்.

காசிக்குச் செல்ல விரும்பிய குருநாதரும் தனது சீடரான முத்துசாமி தீட்சிதரையும் உடன் அழைத்துச் செல்ல விரும்பும் கோரிக்கையினை தீட்சிதரின் தந்தையிடம் கூறவே அவரும் சம்மதித்து குருநாதருடன் அனுப்பிவைத்தார். முத்துசாமி தீட்சிதர் தன் இரு மனைவியரையும் உடன் அழைத்துக் கொண்டு சென்றார். குருநாதரின் மந்த்ரோபதேசத்தைக் கற்றார்.

அந்த மந்த்ரத்திற்கு எந்த அளவிற்கு சக்தி இருக்கும் என்கிற எண்ணம் தீட்சிதரது மனதில் இருப்பதை உணர்ந்த குருநாதர் தீட்சிதரிடம் தான் கற்றுக் கொடுத்த “ஸ்ரீ வித்யா மகா ஷோட ஷாட்க்ஷரி” மந்த்ரத்தை கங்கை நதியில் நின்று

உச்சரிக்கக் கூறினார்.

அடுத்தநாள் கங்கை நதியில் நின்றபடி தீட்சிதர் குரு சொன்னவாறு அந்த மந்த்ரங்களை பக்தியுடன் ஜபிக்க ஆரம்பித்தார். என்னவொரு ஆச்சர்யம். கங்கை நதியிலிருந்து அழகான வீணை ஒன்று கிடைத்தது. ஆண்டவனால் அருளப்பட்ட அந்த வீணையினை தீட்சிதர் தனது வாழ்நாள் முழுவதும் பாதுகாத்து வைத்து இருந்தார். கங்கை நதியில் தனக்கு வீணை கிடைத்ததற்காக பின்னாட்களில் அப்புண்ணியநதி குறித்து முழுமையாக ஒரு கிருதியில் பாடி தன்னுடைய நன்றியினை தெரிவித்துள்ளார்.

மாணவனுக்கான சிட்ஷை முழுமை பெற்றதால் சீடனுக்கு ஊருக்கு செல்ல விடைகொடுத்தார் குருநாதர். பிரிய மனமின்றி மனைவிகளுடன் புறப்பட்டு நேரே திருத்தணிக்கு (தன் குருநாதரின் கட்டளைப்படி) சென்று குருகுஹனை சேவித்தார். அப்போது முருகனே வயோதிகர் வேடத்தில் வந்து தீட்சிதரின் வாயில் ஒரு கற்கண்டு துண்டினைப் போட்டு தரிசனமும் தந்து விட்டுச் சென்றதாகத் தெரிய வருகிறது.

தன் முதல் கிருதியான ‘ஸ்ரீ நாதாதி குருகுஹோ ஜெயதி’ என்ற கிருதியை திருத்தணியில் பாடினார். அன்றைய தினத்திலிருந்து அவர் பாடிய அனைத்து கிருதிகளிலும் ‘குரு குஹ’ என்ற முத்திரையை அமைத்தே பாடலானார்.

பல ஷேத்ரங்களுக்குச் சென்று க்ஷேத்ரமூர்த்தி, அதன் மகிமை,



எட்டையபுரத்திலுள்ள தீட்சிதரது சமாதி

தல வரலாறு போன்றவைகளை தமது கிருதிகளில் அமைத்துப் பாடலானார். பல சீடர்கள் அவரிடம் இசையினைக் கற்றனர். காசியில் இருக்கும் போது ஹிந்துஸ்தானி இசையினைக் கற்றதால், தான் இயற்றியக் கிருதிகளை இந்துஸ்தானி ராகங்களிலும் அமைத்தார்.

தன் வாழ்நாளில் பல அதிசயங்களையும் நிகழ்த்திக் காட்டியுள்ளார். செல்வத்தை ஒரு நாளும் அவர் மதித்ததில்லை. கடைசி நாட்களில் தன் சகோதரனைப் பார்க்க எட்டையபுரம் சென்ற போது மதுரை மீனாட்சி அம்மனை தரிசித்து கமகக்ரியா ராகத்தில் ‘மீனாட்சி’மே என்ற கிருதியைப் பாடினார்.

எட்டையபுரத்தில் 1835-ம் ஆண்டு தீபாவளி நாளன்று தன்னுடைய சீடர்கள் ‘மீனாட்சிமே’ என்ற பாடலை பாடக் கேட்டபடி ஜோதி ஸ்வரூபமாக இறைவனின் பாதக் கமலங்களை அடைந்தார்.

அன்னாரின் சமாதி எட்டையபுரத்தில் முக்கிய சாலையின் ஓரத்திலேயே அமைந்துள்ளது. அவரது உடலைப் புதைத்தார்கள் என்று ஒரு சாராரும், எரித்து விட்டனர் என்று ஒரு சாராரும் கூறுகின்றனர்.

இனி அவருடைய சாஹித்ய தன்மை எப்படி என்று பார்ப்போம். அவர் பக்தி ரஸத்துடன் கூடிய சாஹித்யங்களை வடமொழியில் அழகுற இயற்றினார். அவை சங்கீத சாஸ்திர இலக்கணங்களை ஒத்து இருந்தது. ‘இசைவழியே நல்வழி’ என்றும் அதுவே ஆத்ம சாந்திக்கு வழி கோலும் என்றும் நினைத்த அவர் “சங்கீத சாஸ்த்ராதி சம்யுக்தம் சன்மார்க” என்று தன் கிருதியில் பாடியுள்ளார்.

‘விஸ்வநாதேன ரக்ஷிதோஹம்’ என்ற ஸாமந்தா ராகக் கிருதியில் ‘ஸங்கீத ஸாஸ்தி ராதி ஸம்யுக்தேன ஸமஸ்த ஸாம்ராஜ்ய பரத சிவேனே’ என்று இயற்றியுள்ளார். இதற்கு ‘ஸங்கீத ஸாஸ்திரங்களுடன் இணைந்தவர்; ஸகல ஸாம்ராஜ்யங்களையும் அருளும் சிவபெருமான்’ என்று பொருள்படும்.



இவர் ஒரு ஸ்ரீ வித்யா உபாசகராக இருப்பதால் தேவியை ‘இசைக்குத் தலைவி’ எனவும், ‘இசையின் இலக்கியம்’ என்றும் குறிக்கும் வகையில் திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராஜப் பெருமானுடைய இதய நாயகியான ஸ்ரீ கமலாம்பாள் தேவிமீது நவாவர்ண கீர்த்தனைகளை அர்ச்சனை செய்துள்ளார். இவைகளில் தோடி ராகமதில் அமைந்த ‘கமலாம்பிகே ஆஸ்ரித’ என்ற கிருதியில் ‘சங்கீத ரஸிகே’ என்றும் ‘ஸுகவித்வப்ரதாயிகே’ என்றும் பாடியுள்ளார். இதன் மூலம் சங்கீதத்தையும், கமலாம்பாளையும் எந்த அளவிற்கு பக்தி பூர்வமாக நேசித்தார் தீட்சிதர் என்பது தெளிவாகிறது.

தீட்சிதர் அவர்கள் மிகச் சிறந்த வீணை வித்வான். எனவே, பல இசைக் கருவிகளை தன்னுடைய கிருதிகளில் ஆங்காங்கே வெளிப்படுத்தி உள்ளார்.

வல்லகிவீணை என்பது தேவி மற்றும் சரஸ்வதி தேவியின் கையிலிருக்கும் இசைக் கருவி. புல்லாங்குழல் கிருஷ்ணன் இசைக்கும் கருவி மற்றும் மிருதங்கம், பேரி, ஜல்லி, ஜர்ஜரம் இவைகளை பக்திபூர்வமாக தன் கிருதிகளில் கையாண்டுள்ளார்.

பரம்பொருளின் பாதார விந்தங்களை அடைய பக்தி இசையே முக்கிய வழி என்று கண்டறிந்து அவைகளையும் தன் கிருதிகளில் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

‘இசை என்பது கவலை, பயம், துன்பம் போன்றவைகளை சமநிலைப்படுத்தி அலையில்லா கடலைப்போல நமது மனதைஅமைதிப்படுத்தி எல்லை இல்லா இன்பம் அடைய வழி செய்யும்.” என்று பிரபல வட இந்திய கவிஞர் கூறியது இங்கே நினைவிற்கு வருகிறது.

சில ராகங்கள் நம்மை மெய்மறக்கச் செய்துவிடும். மனம் குதூகலிக்கும். அது போன்ற ராகங்களை தீட்சிதர் பல கிருதிகளில் கையாண்டுள்ளார். உதாரணமாக 1.பூர்வவராளி, 2.மோகன நாட, 3.சுத்த பூபாளம், 4.உதய ரவிச்சந்திரிகா, 5.ஆர்த்ததேஸி, 6.தேவரஞ்சி, 7.கன்னட பங்காள, 8.மேசபௌளி, 9.மார்க்க தேஸி, 10.மாளவபஞ்சமம், 11.பூர்ண பஞ்சமம், 12.ராமகலி, 13.நவரத்ன விலாஸம், 14.கோபிகா வஸந்தம், 15.சுத்த தேஸி, 16.நட நாராயணி, 17.பூர்வகௌள, 18.சிந்துராமக்ரியா, 19.குமுதக்ரியா இவைகளைக் கேட்டால் நம்மை இன்பவானில் சிறகடித்த நிலையில் பறக்கச் செய்யும்.

இவர் இயற்றிய கிருதிகள் காளிதாஸனால் எழுதப்பட்ட சாகுந்தலம், கம்பனால் தமிழில் எழுதப்பட்ட கம்பராமாயணம், ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரால் எழுதப்பட்ட பாடல்கள் இவைகளுக்குச் சற்றும் குறைந்தவை இல்லை.

14 இராகமாலிகைகள், நாட்டியத்திற்கேற்ற பதவர்ணங்கள், நோட்டுஸ்வர சாஹித்தியங்கள் (ஆங்கில வாத்தியத்திற்கு ஏற்றபடி அமைந்தது) ஆகியவைகளை அமைத்துள்ளார் என வரலாறுகள் மூலம் தெரிய வருகிறது.

ஆந்தாளி, சாலங்க நாட, சாமந்தா போன்ற ஆபூர்வ கிருதிகளை அமைத்த இவர் மற்ற ராகங்களான கல்யாணி, தோடி, சங்கராபரணம், பைரவி போன்ற

## முத்துசாமி தீட்சிதர் தொடாத ராகங்களாவன

1. உமா பரணம்
2. கம்பீர வாணி
3. கலாநிதி
4. கல்கட
5. கலகண்டி
6. கானவாரிதி
7. காந்தாமணி
8. சரசாங்கி
9. சந்தரஜோதி
10. சாரமதி
11. சுத்தசீமந்தினி
12. சித்த சேனா
13. சித்த ரஞ்சனி
14. சுப்ர தீபம்
15. சூர்யகாந்தம்
16. செஞ்சுருட்டி
17. திவ்யமணி
18. தேனுகா
19. தீபகம்
20. நளினகாந்தி
21. நாசிகபூஷணி
22. பவப்ரியா
23. பலரஞ்சனி
24. பிந்துமாலினி
25. மந்தாரி
26. மலையமாருதம்
27. மானவதி
28. மாரரஞ்சனி
29. ரத்னாங்கி
30. வனஸ்பதி
31. விஜய ஸ்ரீ
32. ஜெயந்த சேனா
33. ஹம்சநாதம்
34. நவரஸக் கன்னட
35. விவர்த்தினி
36. ஜனரஞ்சனி
37. நீலாம்பரி




ராகங்களையும் விட்டுவைக்கவில்லை.

இவர் பக்திமார்க்கத்தில், சமஸ்கிருத மொழியில் கற்பனை ஊற்றெடுத்த அற்புதக் கிருதிகளை அமைப்பதில் வல்லவராக இருந்ததற்குக் காரணம் இவர் வீணை வாசிப்பதில் விமர்சிக்க முடியாத வித்வத்வம் பெற்றிருந்ததுதான்.

இவர் இயற்றிய கிருதிகளில் நம்முடைய இதயத்தை இன்பமடையச் செய்யும் பாவம், இனிமை, சமஸ்கிருத மொழியில் அமைந்த சீரான இலக்கண கட்டுப்பாடு, சவுக்ககால பிரமாணத்துடன் அமைந்த கிருதிகளின் அமைப்புதான்.

மந்த்ரங்கள், தந்த்ரங்கள், சோதிடம், வானியல், தல வரலாறு, உற்சவ மூர்த்தியின் பெருமை, தெய்வத்தை வணங்கும் முறை, உற்சவ நாள், கிழமை, மாதம், தெய்வத்திற்கு பிடித்த நெய்வேத்தியம், தேவியர்கள், சிறு நிகழ்ச்சிகள், மிருகங்கள், பறவைகள், ஆறுகள், ஊர்வன, மகாராஜாக்கள், நிறங்கள், வாத்தியக் கருவிகள், நாட்டிய வகைகள், தேவி உபாசனைக்கு மந்த்ரங்கள், மலர்கள், தேவர்கள், அரக்கர்கள், தெய்வீகப் பெண்கள், தவசீலர்கள் ஆகிய அம்சங்களை திட்டமிட்டுத் தொகுத்து முறையாகவும், இனிமையாகவும் சங்கீத இலக்கணத்திற்கு உட்பட்டு நல்ல பாவத்துடனும், ராகத்துடனும் கிருதிகளை அமைத்துள்ளார்.

இவருடைய கிருதிகளில் வரும் எதுகை, மோனை, சந்தம் இவைகள் செவிகளுக்கு இதமாக இருக்கும். இதனைத்தான் 'காலம் போகிற வரைக்கும் ப்ரகாசம்' என்று கூறுகிறார்களா? என எண்ணிடத் தோன்றுகிறது.

அவர் வாழ்ந்த நாட்களில் பரம்பொருள் ஒன்றினையே நினைத்து கிருதிகளாகப் பாடி, தானும் பரவசமடைந்து அந்தப் பரம்பொருளையும் பரவசமடையச் செய்து கிருதிகளை கேட்போரையும் பரவசமடையச் செய்த அந்த நாத ஜோதியை என்னவென்று வர்ணிப்பது. அந்த மஹா ஞானியை எதிர்காலச் சமூகம் பூர்ணமாக அறிந்துகொள்ள வேண்டும். அவருடைய கிருதிகளை கேட்டு கேட்டு இன்புற வேண்டும்.

வாழ்க நாத ஜோதி புகழ்
வளர்க அவரின் கிருதிகள்.

தீட்சிதர் தன் குருநாதரிடம் ஸ்ரீ வித்யா ஷோடஸாக்ஷரி உபாசனை பெற்றவர். எனவே, இவருக்கு அணிமாதி ஸித்தி, அஷ்டாங்க யோகம், 5 மகரங்கள், ஐந்து வகை கோஸங்கள், ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம், மாலினி மந்த்ர ஸாஸ்திரம், ஸாங்கிய யோகம், தஹர வித்தை, ராஜயோகம், காதி, ஸாதி, ஹாதி வித்தைகள் எல்லாம் தெரிந்து, புரிந்து, அறிந்து வைத்திருந்தார். இதன் காரணத்தால் தான் இயற்றிய கிருதிகளில் இந்த அம்சங்கள் குறித்து விவரமாகப் பாடியுள்ளார்.



அஸ்டமாசித்திகள் எனப்படும் எட்டுவகை சக்திகள் சித்தர்களாகி இருப்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கும்.

அணிமா:- தோற்றத்தில் பெரிய பொருளாக இருப்பதனை அதன் உருவமும் - இயல்பும் - பண்பும் மாறாத வகையில் அதே வடிவில் அளவில் சிறிய பொருளாக மாற்றுவது.

(பிருங்கி முனிவர் மும்மூர்த்திகளை மட்டும் வலம் வர வேண்டும் என்பதற்காக சிறுவண்டாக உரு மாற்றிக் கொண்டது)

மஹிமா:- தோற்றத்தில் சிறிய பொருளை மிகப் பெரிய பொருளாக விஸ்வ ரூபமாக்குவது.

(வாமன அவதாரத்தில் திருமால் உலகினை அளக்க நெடிய உருவம் எடுத்தது)

லஹிமா:- கனமான பொருளினை வடிவம் மாறாமல் காற்று போல லேசாகச் செய்தல்

(திருநாவுக்கரசரை சமயப் பகை காரணமாக கல்லில் கட்டி கடலில் இட்ட போது அக்கல்லை தக்கை போல மிதக்கச் செய்தது)

கரிமா:- அதிக எடை இல்லாத ஒன்றினை தேவைக்கருதி அதன் வடிவம் மாறாமல் மிக கனமான பொருளாகச் செய்தல்

(இராவணன் கைலாயத்தை பெயர்த்து எடுக்க முயற்சிக்கையில் சிவனார் கட்டை விரலால் அழுத்தி அவனது முயற்சியை தடுத்தது.)

ப்ராக்தி:- நொடிப் பொழுதில் நினைத்த இடத்தை (எந்த உலகானாலும் தடையின்றி) அடைவது.

(வாலி, சூரன் போன்றோர் நினைத்த மாத்திரத்தில் விரும்பும் இடத்தை அடைந்தது)

ப்ரகாமியம்:- ஒரு தேகத்திலிருந்து விரும்பும் வேறு ஒரு தேகத்திற்குள் புகுவது (கூடு விட்டு கூடு பாய்தல்)

(இறந்து போன முகமதியர் ஒருவரது உடலில் புகுந்து மஸ்தான் சாயுபு என்ற பெயரில் இருந்த பட்டினத்தார் ஸ்வாமிகள்)

ஈஸத்துவம்:- ஒன்பது கிரகங்களையும் தன் இஷ்டம் போல் நடக்கச் செய்தல்

(மச்சேந்திரரின் குழந்தை மீனநாதனை கல்லில் அடித்துத் துவைத்து, நீரில் முக்கி தோய்த்து, வெயிலில் உலர வைத்து 108 துண்டுகளாக சிதறிய உடம்பினை மகான் கோரக்கர் ஒன்றாக்கி உயிரூட்டியது.)

வஸித்துவம்:- ஏழு வகை தோற்றமாகிய தேவ - மானிட - நரக - மிருக - பறப்பன - ஊர்வன, தாவரம் ஆகியவற்றுடன் பேசுதல், அவற்றினை தன் வசப்படுத்துதல், தான் எண்ணுவதற்கு ஏற்ப மற்றவர்களையும் நினைக்கச் செய்தல்.

(அப்பர் தன்னைக் கொல்ல வந்த யானையை தடுத்து நிறுத்தியது)

இந்த எட்டு வகை ஸித்திகளைப் பற்றியும் தன் கிருதிகளில் தீட்சிதர் மிக அழகாகப் பாடியுள்ளார்.

●

தீட்சிதர் அவர்கள் தனது கிருதிகளில் வல்லகி வீணை, வீணை, பேரி, புல்லாங்குழல் (வேணு), மத்தளம், மாணிக்க வீணை, துந்துபி, ஜல்லி, ஜார்ஜ் ஜரம், நாகஸ்வரம் ஆகிய பத்து கருவிகளை எந்தெந்த கிருதிகளில் எத்தனை முறைகள் மேற்கோள் காட்டி உள்ளார் என்பதை இனி காண்போம்.



**1. வீணை (16 முறைகள்)**

1. உச்சிஸ்ட கணபதௌ (காஸிராமக்ரியா)
2. கலாவதி கமலாஸன (கலாவதி)
3. காமேஸ்வரேண (ஸ்ரீராகம்)
4. தாஸரதே தீன (ஸங்கராபரணம்)
5. பால கோபால (பைரவி)
6. வீணா புஸ்தக தாரிணி (வேகவாஹினி)
7. வீணா பேரி வேணு (ஆபேரி)
8. வேதாரண்யேஸ்வராய (தோடி)
9. ஸராவதி தட வாஸினி (ஸ்ராவதி)
10. ஸதாஸ்ரயே அபாயம் (சாமரம்)
11. ஸரஸ்வதி மனோஹரி (ஸரஸ்வதி மனோஹரி)
12. வரதராஜமுபாஸ் மஹே (ஸாரங்க)
13. ஸரஸ்வதி விதியுவதி (ஹிந்தோளம்)
14. ஸரஸ்வத்யா பகவத்யா (சாயா கௌள)
15. ஸ்ரீ மீனாம்பிகாயா (தேவ கந்தாரி)
16. மீனாஷிமேமுதம் (கமகக்ரியா)

**2. வல்லகி வீணை - (4)**

1. அம்பா நீலாயதாக்ஷி (நீலாம்பரி)
2. ஸ்ரீ தக்ஷ்ணாமூர்த்தி மீஸம் (பேனத்யுதி)
3. பாரதி மத்திஷணாஜாட் (தேவமனோஹரி)
4. மாமவ மீனாக்ஷி (வராளி)

**3. மாணிக்க வீணை - (1)**

1. மாமவ மீனாக்ஷி ராஜமாதங்கி (வராளி)

**4. பேரி - (5)**

1. உச்சிஷ்ட கணபதௌ (காஸி ராமக்ரியா)
2. காமேஸ்வரேண (ஸ்ரீராகம்)
3. வீணாபேரி வேணு (ஆபேரி)
4. ஸதாஸ்ரயே அபாயம் (சாமரம்)
5. ஹரிஹரி புத்ரம் (வஸந்தா)

**5. புல்லாங்குழல் (வேணு) (12)**

1. உச்சிஸ்டகணபதௌ (காஸி ராமக்ரியா)
2. ரேணுகா தேவீஸம் (கன்னட பங்களா)
3. வரதராஜ முபாஸ்மஹே (ஸாரங்க)
4. வீணா புஸ்தக தாரிணி (ஆபேரி)
5. ஸராவதி தடவாஸினி (ஸராவதி)
6. ஸந்ததம் கோவிந்தராஜம் (ஸங்கராபரணம்)
7. ஸரஸ்வதி மனோஹரி (ஸரஸ்வதி மனோஹரி)
8. ஸரஸ்வதி விதியுவதி (ஹிந்தோளம்)
9. ஹரி ஹர புத்ரம் (வஸந்தா)
10. ஸ்ரீ கிருஷ்ணம் பஜமானஸ (தோடி)
11. ஸந்தான ராமஸ்வாமி (கமாஸ்)
12. ஸ்ரீ பார்த்தசாரதி நீ (ஸுத்த தன்யாசி)

**6. மத்தளம் (5)**

1. சந்த்ர ஸேகரம் ஸதா (மார்க்க ஹிந்தோளம்)
2. த்யாகராஜ மஹத் (ஸ்ரீ ராகம்)
3. ஸதாஸ்ரயே அபாயம் (சாமரம்)
4. த்யாராஜஸ்ய பத்தோப (ருத்ரப்ரியா)
5. அகிலாண்டேஸ்வரி (ஜுஜாவந்தி)

**7. துந்துபி (1)**

1. ஸ்ரீ தும்துர்கே ஸிவஸம்ஸர்கே (ஸ்ரீ ரஞ்சனி)

**8. ஜல்லி (1)**

1. அகிலாண்டேஸ்வரி (ஜுஜாவந்தி)

**9. நாதஸ்வரம் (1)**

1. தியாகராஜமஹத் (ஸ்ரீராகம்)

தீட்ஷிதர் தன்னுடைய கிருதிகளுக்கு 17 வகையான தாளங்களைப் பயன்படுத்தி உள்ளார். அவையாவன:-

| | | |
|---|---|---|
| 1. | ஆதிதாளம் | : 184 |
| 2. | ரூபக தாளம் | : 141 |
| 3. | மிஸ்ரசாபு தாளம் | : 52 |
| 4. | திஸ்ர ஜாதி ஏகதாளம் | : 20 |
| 5. | த்ரிபுட தாளம் | : 16 |
| 6. | ஜம்ப தாளம் | : 15 |
| 7. | சதுர்ச ஜாதி தாளம் | : 14 |
| 8. | சதுர்ச ஜாதி ஏக தாளம் | : 8 |
| 9. | கண்ட ஜாதி ஏக தாளம் | : 11 |
| 10. | அட தாளம் | : 5 |
| 11. | கண்ட ஜாபு தாளம் | : 5 |
| 12. | கண்ட ஜாதி த்ரிபுட தாளம் | : 2 |
| 13. | மட்ய தாளம் | : 2 |
| 14. | கண்ட ஜாதி தாளம் | : 1 |
| 15. | த்ரிபுட ஏக தாளம் | : 1 |
| 16. | துருவ தாளம் | : 1 |
| 17. | திஸ்ர ஜாதி ரூபக தாளம் | : 1 |
| | **மொத்தக் கிருதிகள்** | **: 479** |

**மு**த்துஸ்வாமி தீட்சிதர் இயற்றிய மொத்தம் 479 கிருதிகளில் 474 கிருதிகளில் மட்டும் 'குரு குஹ' என்ற முத்திரை உள்ளன. 5 கிருதிகளில் மட்டும் அவ்வித முத்திரை இல்லை. அத்தகைய கிருதிகளாவன:

1. ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி மீது சங்கராபரண ராகத்தில் 'தாஸரதே தீன தயாநிதே' என்ற கிருதி.

2. தஞ்சை ப்ருஹதீஸ்வரர் மீது நபோமணி ராகத்தில் அமைந்த 'நபோமணி சந்த்ராக்னி நயனம்' என்ற கிருதி.

3. காஞ்சி காமட்சி மீது சங்கராபரண ராகத்தில் அமைந்த 'ஹேமாயே மாம்பாதிதும் காஹித்வம்' என்ற கிருதி.

4. குழிக்கரை அருகேயுள்ள கதம்பேச்வரர் மீது வஸந்தா ராகத்தில் இயற்றிய 'நீலகண்ட மஹாதேவ நிகிலலோக' என்ற கிருதி.

5. திருவாரூர் வால்மீகேச்வரர் மீது ஸ்ரீ ரஞ்சனி ராகத்தில் அமைந்த 'நீ ஸாடி தைமெந்து லேதனி' என்ற கிருதி.

தீட்ஷிதர் தனது கிருதிகளை அதிகபட்சமாக 15 வரிகளிலும், குறைந்த பட்சமாக 2 வரிகளிலும் அமைத்துள்ளார்.

1. பல்லவி - அனுபல்லவி - சரணம் இவைகளைக் கொண்ட கிருதிகள் - 278.

2. பல்லவி - சரணம் மட்டுமே கொண்ட கிருதிகள் - 159.

**தீஷிதர் அவர்கள் பாடி புத்தகமாக வெளிவந்த பாடல்களின் ராகங்களும், பாடிய கிருதிகளின் எண்ணிக்கையும் கீழே தரப்பட்டு உள்ளது.**



| | |
|---|---|
| 1. ஒரு ராகத்தில் 12 கிருதிகள் பாடியது (சங்கராபரணம்) | - 12 |
| 2. ஒரு ராகத்தில் 11 கிருதிகள் பாடியது (கல்யாணி) | - 11 |
| 3. 8 கிருதிகள் வீதம் 4 ராகங்கள் | - 32 |
| 4. 7 கிருதிகள் வீதம் 3 ராகங்கள் | - 21 |
| 5. 8 கிருதிகள் வீதம் 6 ராகங்கள் | - 36 |
| 6. 5 கிருதிகள் வீதம் 8 ராகங்கள் | - 40 |
| 7. 4 கிருதிகள் வீதம் 13 ராகங்கள் | - 52 |
| 8. 3 கிருதிகள் வீதம் 14 ராகங்கள் | - 52 |
| 9. 2 கிருதிகள் வீதம் 43 ராகங்கள் | - 86 |
| 10. 1 கிருதி 96 ராகங்கள் | - 06 |
| 11. நோட்டு ஸ்வரங்கள் | - 37 |
| 12. ராகமாலிகை | - 4 |

# நடிகைகளும் இராகங்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. காந்திமதி | 6. அம்பிகா | 11. ரம்யா | 16. ஊர்மிளா |
| 2. கௌதமி | 7. பானுமதி | 12. நந்தினி | 17. மனோரமா |
| 3. அம்சா | 8. வைஷ்ணவி | 13. ஷர்மிளா | 18. பானுப்ரியா |
| 4. வினோதினி | 9. சாவித்ரி | 14. சுகுமாரி | 19. சிவரஞ்சனி |
| 5. வாணிஸ்ரீ | 10. சிந்து | 15. ரோஹிணி | 20. சந்திரகாந்தா |
| | | | 21. ரேவதி |

*என்னது இது? ஸங்கீதப் பத்திரிகையில் சினிமா நடிகைகளின் பெயர் பட்டியல் என எண்ணுகிறீர்களா? அதற்கு எந்த வகையிலும் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல.*

*காரணம், மேலே கூறப்பட்டுள்ள 21 பெயர்களிலும் இராகங்கள் உள்ளன. அவை எந்த மேளகர்த்தா ராகத்தின் ஜன்யம். அவற்றின் ஆரோகணம் - அவரோகணம் என்ன என்பதனையும் இனி பார்ப்போம்.*

1. **காந்திமதி** : 60-வது மேளமான நீதிமதியின் ஜன்யம். ஸரிகமபதஸ் ஸ்தபமகரிஸ

2. **கௌதமி** : 1-வது மேளமான கனகாங்கியின் ஜன்யம். ஸரிகபதநிஸ் ஸ்நிதபகரிஸ

3. **அம்சா** : 15-வது மேளமான மாயாமாளவ கௌளையின் ஜன்யம். ஸரிகபதஸ் ஸ்தபமரிஸ

4. **வினோதினி** : 15-வது மேளமான மாயாமாளவ கௌளையின் ஜன்யம். ஸரிகமதநிஸ் ஸ்நிதமகரிஸ

5. **வாணிஸ்ரீ** : 68-வது மேளமான ஜோதி ஸ்வரூபிணியின் ஜன்யம். ஸரிகமநிஸ் ஸ்நிமகரிஸ

6. **அம்பிகா** : 59-வது மேளமான தர்மவதியின் ஜன்யம். நிஸகமபநிஸ் ஸ்நிதபமகரிஸ

7. **பானுமதி** : 8-வது மேளமான வனஸ்பதியின் ஜன்யம். ஸரிகரிமபஸ் ஸ்நிதபமகரிஸ

8. **வைஷ்ணவி** : 50-வது மேளமான நாம நாராயணியின் ஜன்யம். ஸரிகமதநிஸ் ஸ்நிமகரிஸ

9. **சாவித்ரி** : 40-வது மேளமான நவநீதத்தின் ஜன்யம். ஸகமபதஸ் ஸ்தபமகஸ

10. **சிந்து** : 37-வது மேளமான சாலகத்தின் ஜன்யம். ஸரிகரிமபஸ் ஸநிதபநிதமகரிஸ்

11. **ரம்யா** : 32-வது மேளமான ராகவர்த்தினியின் ஜன்யம். ஸகரிகமபதநிபஸ் ஸ்நிபமகரிஸ

12. **நந்தினி** : 28-வது மேளமான ஹரிகாம்போதியின் ஜன்யம். ஸரிகமபநிஸ் ஸ்நிதமகஸ

13. **ஷர்மிளா** : 22-வது மேளமான கரஹரப்ரியாவின் ஜன்யம். ஸரிகமரிமபநிகபதநிஸ ஸநிதநிதமகமரிகரிமகஸ

14. **சுகுமாரி** : 20-வது மேளமான நடபைரவியின் ஜன்யம். ஸகமபநிதநிஸ் ஸ்நிபமகமரிஸ

15. **ரோஹிணி** : 17-வது மேளமான சூர்யகாந்தத்தின் ஜன்யம். ஸரிகம$_1$ ப$_2$ தநிஸ் ஸ்நிதம$_2$ம$_1$ரிஸ

16. **ஊர்மிளா** : 16-வது மேளமான சக்கரவாகத்தின் ஜன்யம். ஸரிகமபநிஸ ஸநிதபமகரிஸ

17. **மனோரமா** : 51-வது மேளமான காம வர்த்தினியின் ஜன்யம். ஸரிகமமபதநிஸ ஸ்நிதபமகமகரிஸ (இது ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் உருவாக்கிய ராகம்)

18. **பானுப்ரியா** : 21-வது மேளமான கீரவாணியின் ஜன்யம். ஸரிகமபஸ் ஸ்பமகரிஸ

19. **சிவரஞ்சனி** : 22-வது மேளமான கரஹரப்ரியாவின் ஜன்யம். ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ

20. **சந்திரகாந்தா** : 8-வது மேளமான ஹனுமத் தோடியின் ஜன்யம். ஸரிகமபதநிஸ் ஸ்பகநிதபமகசரிஸ

21. **ரேவதி** : 15-வது மேளமான மாயாமாவை கௌனையின் ஜன்யம். ஸரிமபநிஸ் ஸ்நிபமரிஸ

– குஹப்ரியா

# கலைமகள் கைப்பொருளே...



**தா**வரங்களுக்கு ஒலியினை கிரகித்துக் கொள்ளும் சக்தி உண்டு. விஞ்ஞான ரீதியாக நிரூபணமான இவ் உண்மையை பல ஆண்டுகளுக்கு முன்பே நன்குணர்ந்த நம் முன்னோர்கள் ஆலயங்களுக்கு அருகாமையில் பலா மரங்களை வளர்த்தனர்.

ஆலயமணி ஓசை, வேத கோஷங்களின் ஒலி அலைகள், பூஜையின் போது இசைக்கப்படும் வாத்யங்களின் இனிய நாதம் மற்றும் ஆலயத்தில் பக்திப் பாடல்கள் பாடும்போது எழும் இன்னொலி இவையாவும் சுமார் 50 அல்லது 60 ஆண்டுகளுக்கு தினந்தோறும் அந்த பலா மரங்களால் ஈர்க்கப்பட்டு வரும்.

இவ்வாறாக அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஆலயம் சார்ந்த சுநாதங்களை தனக்குள் இழுத்துக் கொண்ட பலா மரங்களுக்கு 'மணிப்பலா' என்று பெயர். இத்தகைய மணிப்பலாவில்தான் வீணை வாத்யத்தை தயாரிப்பார்கள். இந்த நூற்றாண்டின் துவக்க காலம் வரை 'மணிப்பலா' தான் வீணைக்கு தேர்வு செய்யப்பட்டது. இது தரத்தில் மிகவும் உயர்ந்தது.



ஆயக்கலைகள் 64-இல் வீணை இசைப்பதும் ஒன்று. 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கீத ரத்னாகர சாரங்க தேவர் எழுதிய 'சங்கீத ரத்னாகரம்' எனும் நூலில் 11 வகையான வீணைகள் குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன. 'சங்கீத தாமோதரம்' எனும் நூலின்படி பார்த்தால் 29 வகையான வீணைகள் இருந்துள்ளன. சரஸ்வதியின் வீணைக்குப் பெயர் 'கச்சபி வீணை'.

இன்று உபயோகத்தில் உள்ள தஞ்சாவூர் வீணைக்கும், பழங்காலத்து வீணைக்கும், அளவிலும் - வடிவத்திலும் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருள்களிலும் சிறு மாறுபாடுகள் உண்டு. இப்போது நாம் பயன்படுத்தும் இவ்வீணைக்குப் பெயர் 'ரகுநாத வீணை'.

தஞ்சையை நாயக்க மன்னர்கள் ஆண்ட காலத்தில் ரகுநாத நாயக்க மன்னரின் (1600 - 1634) அமைச்சரவையில் முக்கிய அமைச்சராகப் பணியாற்றிய கோவிந்த தீட்சிதர் என்பவர் இசையில் நல்ல தேர்ச்சி உடையவர். இவர் ஒரு வீணையை வடிவமைத்துத் தயாரித்தார். அந்த வீணைக்கு தன் மன்னன் பெயரால் ரகுநாத வீணை எனப் பெயரிட்டார். வீணை செய்யும் தொழிலை சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூரில் இவர்தான் துவக்கி வைத்து பெரிதும் ஊக்குவித்தார்.

கோவிந்த தீட்சிதர் சூட்டிய ரகுநாத வீணை என்ற பெயர் நிலைக்கவில்லையே தவிர இவரால் வடிவமைக்கப்பட்ட வீணையை தயாரிக்கும் தொழிலானது தஞ்சாவூரில் இன்றும் அமோகமாக நடந்து வருகிறது. உலகம் முழுமைக்கும் இங்கிருந்துதான் வீணைகள் ஏற்றுமதி ஆகி வருகின்றன.

இசைக்கருவிகளின் மஹாராணி

வீணை. கலைமகளின் தெய்வமாகிய ஸரஸ்வதி தேவியே வீணையை வாசிப்பதால், மற்ற எந்த வாத்யங்களுக்கும் இல்லாத தனிச்சிறப்பு வீணைக்கு வழங்கப்படுகிறது.

கலைகள் மட்டுமின்றி அம்பாள், பிள்ளையார், லக்ஷ்மி,சிவன், விஷ்ணு, ஆஞ்சநேயர் போன்ற தெய்வங்களும், அகஸ்தியர், யாக்யவல்ஞர் போன்ற ரிஷிகளும் நாரதர் உட்பட பல தேவர்களும், கந்தர்வர்களும் வீணையை வாசித்துள்ளனர் என்று புராணங்களிலிருந்து அறிகிறோம். ஆஞ்சநேயர் வீணை வாசிப்பது போன்ற ஓர் அரிய சிற்பம் கும்பகோணம் ஸ்ரீ ராமசாமி கோவிலில் காணப்படுகிறது.

45 வருடங்களுக்கு முன்பு தெனாலி சுப்பாராவ் என்பவர் சென்னையில் சியாமா சாஸ்திரி இசைவிழா நடத்தினார். அவ்விழாவில் சங்கீதத்திற்கென்று பிரத்யேக கொடி ஒன்றினை செம்மங்குடி சீனிவாஸய்யர் ஏற்றி வைத்தார். முழுக்க வெண்மை நிறத்திலான அக் கொடியின் மையத்தில் ஆஞ்சநேயர் வீணை வாசிக்கும் காட்சி இடம் பெற்றுஇருந்தது.

வீணை மிகவும் தொன்மை வாய்ந்த வாத்யம். இவ்வாத்யம்





வீணை காயத்ரி

அக்காலத்தில் ஒவ்வொரு உயர் மற்றும் நடுத்தரக் குடும்பங்களில் ஒரு உறுப்பினராகவே இருக்கும். யாராவது அதை மீட்டிக் கொண்டு இருப்பர். இருபதாம் நூற்றாண்டில் மக்கள்; வேகமான பொருளாதார உலகத்திற்குள் நுழையவே போதாக்குறைக்கு ஓய்வும் - கலை மீதான ஈடுபாடும் குறையவே வீணை வாத்யம் வீட்டு ஹாலின் அலங்காரப் பொருளாக மாறி பேசா உறுப்பினராகி நின்றது. சமீப காலமாக பிளாட் சிஸ்டத்தில் அதுவும் காணாமல் போய்விட்டது.

வீணை வாத்யம் வேதத்திலிருந்து உருவானதாக கூறுகின்றனர். 'வேத ஜனித வர வீணா' என்பது சத்குரு தியாகராஜ ஸ்வாமிகளின் வாக்கு.

ஒரு வீட்டில் வீணை இருந்தாலே அந்த வீட்டை பில்லி, சூன்யம், ஏவல் போன்ற தீய சக்திகள் எதுவும் அண்டாது. வீட்டார் மீதான கண் திருஷ்டிகள் அன்றன்றே காலாவதியாகிவிடும் என்று பலராலும் நம்பப்பட்டது.

யார் ஒருவர் வீணை வாசிப்பதனை கலையாகக் கற்கிறார்களோ, வாசிக்கிறார்களோ அவர்களுக்கு மறுபிறவி என்பதே கிடையாது. 'மோட்சம்' எனும் வீடு பேறு அவர்களுக்கு காத்திருக்கும் என்று 'யாக்யவல்ஞர்' கூறியுள்ளார்.

வீணையிலுள்ள 24 மெட்டுகளை காயத்ரி மந்திரத்தில் உள்ள 24 அட்சரங்களுடன் ஒப்பிட்டுச் சொல்வர்.

வீணை இசைத்துப் பாட்டுப் பாடினால் இறை அருளை எளிதில் பெற முடியும் என்பதற்கு இலங்கேஸ்வரன் வீணை இசைத்துப் பாடி சிவபெருமான் அருளினைப் பெற்ற சம்பவம் நல்லதொரு சான்று. அவ்வளவு ஏன் இராவணின் கொடியே வீணைக் கொடிதான்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதர் ஒரு சிறந்த வீணா வித்வாம்சகர். மறைந்த

காஞ்சி மாமுனிவர் பெரியவாளுக்கும் வீணை வாசிக்கத் தெரியுமாம். ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளும் வீணை வாசிப்பதில் மிகவும் பிரியமுள்ளவர். இவர் ஜீவ சமாதி அடைவதற்கு எல்லா ஏற்பாடுகளும் நடக்கும் அதே தருவாயில் வீணையைக் கொண்டு வரச் செய்து அதிலே பைரவி இராகத்தில் தனக்குப் பிடித்த கீர்த்தனை ஒன்றினை வாசித்துவிட்டு அதன் பின்னர் தான் சமாதிக்காக இறங்கினாராம்.


'வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்' என்று பாரதியார் சரஸ்வதியைப் பாடுகிறார். ஆகவே, வீணையும் - தெய்வீகமும் ஒன்றுடன் ஒன்று கலந்திருப்பவை. வீணையைப் பற்றிக் குறிப்பிடும் போது அதன் தெய்வீகத் தன்மையினை கூறாமல் இருக்க முடியாது.

வீணை என்னும் சொல்லிற்கே 'இனிமையான ஒலி' என்பதுதான் பொருளாகும். மனிதக் குரலுக்கு இணையாக இனிமையான ஒலியினை வெளிப்படுத்துவதால் இதற்கு 'வீணை' என்று பெயரானது. கமகங்கள் மொத்தம் 15 வகைப்படும். இவை அனைத்தையும் வீணையில் வாசிக்க முடியும்.

வாய்ப்பாட்டு கற்றுக் கொள்பவர்களுக்கு ஸ்வர ஞானம் முழுமையாகக் கிடைக்க அக்காலத்தில் வீணையையும் வாசிக்கக் கற்றுத் தருவார்கள். வீணை வாசிக்கத் தெரியாதவர்களை ஒரு முழுமையான வித்வானாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஒரு பெண் கருவுற்ற சில மாதங்களிலேயே சிசுவிற்கு சப்தங்களை கிரகித்துக் கொள்ளும் சக்தி ஏற்பட்டுவிடும். பிறக்க விருக்கும் குழந்தை நல்ல சங்கீத ஞானத்துடன் இருக்க வேண்டுமானால் நாலாம் மாதம் முதல் கர்ப்பிணிப் பெண் வீணை இசையினை அவ்வப்போது கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.





காரணம், மற்ற கருவிகளின் ஒலியைக் காட்டிலும் வீணையின் நுண் அலைகளுக்கு கருவினுள் இருக்கும் சிசுவின் செவிகளை சென்றடையும் தன்மை சற்று அதிகம். இதனால் தானோ என்னவோ... சீமந்த வைபவத்தின் போது வீணை வாசிக்கச் சொல்லிக் கேட்கும் வழக்கம் தற்போதும் வழக்கத்தில் இருக்கிறது.


இப்போது வீணை வாசிப்பவர்கள் மின் இணைப்பு வசதியினை உள்ளீடு செய்துதான் வாசிக்கின்றனர். இதனை முதன் முதலில் அறிமுகப்படுத்தி பின்பற்றியவர் அமரர் எஸ்.பாலச்சந்தர். லால்குடி ஜெயராமனின் சகோதரியான பத்மாவதி அனந்தகோபாலன் பெயர் சொல்லும் வீணைக் கலைஞராக விளங்கினார். தந்தை லால்குடி கோபாலய்யர்தான் இவருக்கு குரு. கேட்கவா வேண்டும்? இவர் தன்னிடம் பயிலவரும் மாணவர்களுக்கு 'காயகபாணி' என்றழைக்கப்படும் வாய்ப்பாட்டு பாணியில்தான் பயிற்றுவித்து வந்தார்.

கர்னாடக சங்கீதத்துறையில் மட்டுமல்ல; திரை இசைத்துறையிலும் கொடி கட்டிப் பறக்கும் நமது தொன்மை வாத்தியங்களில் வீணைக்கு இன்றைக்கும் பிரதான இடம் உண்டு. குறிப்பாக; படத்தின் பின்னணி இசையில் இவ் வாத்தியத்தின் ஆதிக்கம் அதிகம் இருக்கும். காட்சியில் காட்டப்படும் சூழ்நிலைக்கேற்ப பார்வையாளனின் மனதையும் ஒருமுகப்படுத்தும் ஆற்றல் இவ் வாத்தியத்தின் ஒலிக்கு அதிகம் உண்டு. ஆதலால், பெரும்பாலான இசை அமைப்பாளர்கள் வீணைக்கு முக்கியத்துவம் தரத் தவறுவதில்லை.

இசை உலகின் ராஜவாத்யம் நாதஸ்வரம் என்றால் மஹாராணி வீணைதான்.

**- ஹரிஹேஸ்**

# தெட்சிணாமூர்த்திப் பிள்ளையும்... மனிதாபிமானமும்...



புதுக்கோட்டை
தெட்சிணாமூர்த்திப்
பிள்ளை

புதுக்கோட்டையிலிருந்து தெட்சிணாமூர்த்திப் பிள்ளை திருச்சியில் இருந்த தனது பிரதான சிஷ்யரான தட்சிணாமூர்த்தி ஆச்சாரியர் (குருவிற்கும் - சிஷ்யருக்கும் ஒரே பெயர்தான்) வீட்டிற்கு வந்து இருந்தார்.

இதனைக் கேள்விப்பட்ட அன்றைக்கு சிறுவனாக இருந்த எம்.கே.தியாகராஜ பாகவதரை அவரின் தந்தையார் சிறுவன் தட்சிணாமூர்த்திப் பிள்ளை யிடம் ஆசிர்வாதம் பெறுவதற்காக அழைத்து வந்தார். பிள்ளையிடம் மகனை ஆசிர்வாதம் பெற வைத்ததும் "இவனுக்குச் சங்கீதத்தில் ஆர்வம் அதிகமாக உள்ளது. இங்கே உள்ள ஒருவரிடம் சங்கீதபால பாடமும் பயின்று வருகிறான்" என அறிமுகம் செய்துள்ளார். இதைக் கேட்டதும் பிள்ளை எம்.கே.டி.யைப் பார்த்து "அப்படியா... சபாஷ்... ஏதாவது ஒரு உருப்படி பாடு கேட்போம்" என்றார்.

எம்.கே.டி.யும் கரஹரப்ரியா ராகத்தில் 'பக்கல நிலபடி' கீர்த்தனையை பாடிக் காண்பித்தார். "நன்றாகவே பாடுகிறாய்... இன்னும் சாதகம் தேவை. ஆர்வத்தை மட்டும் விட்டுவிடாதே" என பிள்ளை ஆசிர்வதிக்கும் போதே எம்.கே.டி. அவரது காலில் மீண்டும் விழுந்து நமஸ்கரித்தார். அப்போது எம்.கே.டி.யின் பூணூலில் (பொற்கொல்லர் எனும் ஆசாரி சமூகத்தவர்) கோர்த்திருந்த இரும்புச் சாவி தரையில் விழுந்தது.

இதனைக் கண்டுவிட்ட பிள்ளை எம்.கே.டி.யின் தந்தை பக்கம் திரும்பி "ஆண்டவனே... உங்கள் பையன் பூணூலில் இருக்கும் இதே இரும்புச் சாவி ஒரு காலத்தில் தங்கச் சாவியாகலாம்" என்றாராம். பிள்ளை அவர்கள் மறைந்து பல வருடங்களுக்குப் பின் எம்.கே.டி. பெரும் பேரும் - புகழும் பெற்று விளங்கிய காலத்தில் சென்னையில் ஒரு திரையரங்கத்தின் திறப்பு விழாவிற்கு அழைக்கப்பட்டு இருந்தார்.

விழா நிர்வாகிகள் எம்.கே.டி.யே எதிர்பாராத வகையில் அவருக்கு விழாவிற்கான நினைவுப் பரிசாக ஒரு தங்கச் சாவியை தந்தனர். எம்.கே.டி.க்கு பல வருடங்களுக்கு முன்பு பிள்ளை அவர்கள் சொன்ன வார்த்தைகள் நினைவிற்கு வந்தது.

திருச்சிக்கு திரும்பியதும் முதல் வேலையாக பிள்ளையின் சிஷ்யரான தட்சிணாமூர்த்தி ஆச்சாரியை சந்தித்து "அன்று ஐயா ஆசிர்வதித்தபடி இன்று நடந்துவிட்டது" என்று சொல்லி தங்கச் சாவியை அவரிடம் காட்டி ஆசிர்வாதம் பெற்று மகிழ்ந்தாராம். எம்.கே.டி.

*

ஒரு சமயம் திருச்சி வந்திருந்த பிள்ளை அவர்கள் சின்னக் கடைத் தெருவில் உள்ள ஒரு ஜவுளிக் கடையில் வழக்கம் போல் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தார். கடை மேற்குப் பார்த்து இருந்ததால் மாலை வெயிலுக்காக கடையின் முன் 'படுதா' ஒன்று தொங்கவிடப்பட்டு இருந்தது. பிள்ளைதான் அடிக்கடி

வெற்றிலைப்பாக்கு போடும் பழக்கம் உள்ளவராயிற்றே. எச்சிலை துப்புவதற்காக படுதாவை கொஞ்சமாக விலக்கிக் கொண்டு உமிழ்ந்தார்.

அப்போது, அவ்வழியே வந்த ஒரு பிராமணச் சிறுவன் மீது அந்த எச்சில்பட்டு விட்டது. இதைப் பார்த்ததும் பிள்ளை பதற்றம் அடைந்தார். உடனே அச்சிறுவனை தன் பக்கம் அழைத்து தண்ணீர் கொண்டு வரச் செய்து தானே தனது எச்சில்பட்ட இடமெல்லாம் கழுவிவிட்டார். விளைவு; அச் சிறுவனது ஆடைகள் முழுவதும் தொப்பரையாக ஈரமாயின. என்ன நினைத் தாரோ தெரியவில்லை.

தான் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தது ஜவுளிக் கடை என்பதால் நண்பரான கடைக்காரரிடம் அச் சிறுவனுக்கு பொருந்துகிறாா் போல ஒரு பட்டு வேட்டியும், பட்டுத் துண்டும் வாங்கி சிறுவனது ஈரமான உடைகளை தானே அகற்றி பட்டுப் புத்தாடைகளை அணிவித்துவிட்டார். "தம்பி... இந்த தப்பு என் கவனக் குறைவால் தெரியாமல் நடந்துவிட்டது. வருத்தப்படாதே" என அச்சிறுவனிடம் அழாத குறையாக வருத்தம் கொண்டாடினார். ஆனால், அச்சிறுவனுக்கோ கடந்த அரை மணிநேரமாக அங்கே தனக்கு நடப்பது எல்லாம் ஏன்? எதற்கு? என்பதெல்லாம் புலப்படாமல் புரிபடாமல் எல்லாவற்றிற்கும் உடன்பட்டுக் கொண்டிருந்தான் என்பதே வேடிக்கை.

வீட்டுக்குப் பட்டு வேட்டி, பட்டுத் துண்டுடன் சென்ற சிறுவனைப் பார்த்த அவனது பெற்றோர் விவரம் கேட்டு ஆச்சர்யப்பட்டனர். அப்பேர்பட்ட பெரிய மனசுக்காரன் இந்த ஊர்ல யாருன்னு பார்க்கும் ஆவலில் சம்பவம் நடந்த இடத்திற்கு சிறுவனுடன் வந்தனர். பிள்ளைவாளை கண்டதும் அவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. குடும்ப சகிதமாக அது கடைத்தெரு என்றும் பார்க்காமல் பிள்ளைவாளின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றுச் சென்றனர்.

*

மற்றொரு சமயம் உள்ளூரான புதுக்கோட்டையிலேயே கச்சேரி. பிள்ளைதான் மிருதங்கம். வாத்யத்தில் மீட்டு, சாப்பு துளியளவு கலைந்திருந்தது. இதற்காக வெறுப்பாகி அடுத்தடுத்து என ஆறு மிருதங்க வாத்யங்களைக் கிழித்து விட்டார்.


எம்.கே.டி.

அதோடு விட்டாரா? அடுத்தடுத்த நாட்களில் வெவ்வேறு ஊர்களில் தலா ரூ.300-க்கு ஒப்புக் கொண்டிருந்த ஆறு கச்சேரிகளது ஏற்பாட்டாளர்களுக்கும் "வருவதற்கு சாத்தியமில்லை. வேறு பக்கவாத்யம் ஏற்பாடு செய்து கொள்ளவும்" என்று தந்திகளை தந்துவிடவும் ஏற்பாடு செய்தார்.

பிள்ளையவர்கள் தனது தொழிலில் ஒழுங்குக்கும் - நேர்த்திக்கும் மிகவும் முக்கியத்துவம் கொடுப்பவர். ஒப்புக்கு தட்டிவிட்டுப் போகிற வேலை எல்லாம் அவரிடம் இருக்கவே இருக்காது. தனது வாசிப்பின் மூலம் ரசிகர்களை மட்டுமின்றி யாருக்காக வாசிக்கிறோமோ அந்த கலைஞரின் கச்சேரியை மெருகேற்ற வேண்டும் அதன் மூலம் விழா ஏற்பாட்டாளர்களையும் திருப்திபடுத்த வேண்டும் என விரும்புபவர் பிள்ளை.

*

நண்பரொருவர் வீட்டில் பிள்ளை அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது அக் குடும்ப உறுப்பினர் ஒருவரை தேள் ஒன்று கொட்டிவிட்டது. தேள் கடிக்கு ஆளானவர் வலி தாங்கமுடியாமல் கத்தி ரகளை செய்ய

ஆரம்பித்துவிட்டார். மற்றவர்கள், கடித்த தேளைக் கண்டுபிடித்து கொன்று போட அலைபாய்ந்தனர். அத்தேளும் அவர்கள் வசம் சிக்கியது. கொல்லப் போகும் முன் ஆவேசக்காரர்களை தடுத்த பிள்ளையவர்கள்,

தேளின் குணம் கொட்டுவது. அதன் மேல் நமது அங்கம் படாதவரை அது நம்மை தீண்டாது. அதனை கொல்வதை விடுத்து தூரத்தில் கொண்டு போய் விடுங்கள் என வேண்டுகோள் விடுத்தார். சொல்வது பிள்ளையாயிற்றே வேறு வழியின்றி அவ்வாறே நடந்து கொண்டார்கள்.

*

**தி**ருச்சியில் ஒருமுறை சக வித்வானுடன் (திண்ணியம் வெங்கட்ராமையர்) தெருவில் பேசியபடி சென்றபோது நகராட்சி ஊழியர்கள் தெருநாய்களை எல்லாம் துரத்தி துரத்தி வலை மூலம் பிடித்து அவற்றிற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட கூண்டு வண்டிக்குள் நாய்களின் வாயையும், கால்களையும் கட்டி ஒன்றன் மீது ஒன்றாக தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தனர்.

இதைப் பார்த்துவிட்ட பிள்ளை துடி துடித்துப் போய் அந்நாய்களை விட்டுவிடும்படி அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடினார். அவ் ஊழியர்களோ "இது நகரசபையின் உத்தரவு. இரக்கம் பார்த்து, நீங்கள் சொல்வது போல் செய்தால் எங்கள் வருமானத்தில் மண் விழுந்து விடும்" என்று கூறியபடி தங்கள் வேலையில் கவனமாக இருந்தனர்.

இதைக் கேட்ட பிள்ளைக்கு கோபம் வந்தது. "வாயில்லா ஜீவன்களை கொல்வதில் வருமானம் பார்ப்பதா?" என்று முனகியபடி அவர்களிடம் "இவைகளை விட்டுவிடுவதால் உங்களுக்கு எவ்வளவு வருமான இழப்பு ஏற்படும்?" என்றார். இந்த ஆளு எங்கே அவ்வளவு காசை கொடுக்கப்போகிறார். என்று எண்ணியபடி ஒருகுறிப்பிட்ட தொகையை உத்தேசமாகச் சொன்னார்கள். "அவ்வளவுதானே?" என்று கேட்ட பிள்ளையவர்கள் பாக்கெட்டில் கைவிட்டு பணத்தை எண்ணினார். அவர்கள் கேட்டதற்கும் மேலாகவே அத் தொகை வந்தது. இருப்பினும் அப்படியே கொடுத்து எல்லா நாய்களையும் விடுவிக்கும்படி பணித்தார்.

காசுக்கு யோசித்து சொந்த வளர்ப்பு நாயையே கண்டு கொள்ளாமல் போகிறவர்கள் மத்தியில் முகமறியா நாய்களுக்கு சொந்தப் பணத்தை ஒரு மனுஷன் தூக்கித் தருவது நகரசபை ஊழியர்களுக்கே ஆச்சர்யத்தை தந்ததாம்.

இன்னொரு நல்ல பழக்கமும் பிள்ளை யவர்களின் வழக்கத்தில் இருந்துள்ளது.

அதாவது, ஒரே மருந்தால் பலதரப்பட்ட நோய்களைத் தீர்க்கும் வல்லமை கொண்ட உயர்ந்த பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட இரண்டொரு பஸ்ப செந்தூரங்களையும், ஒரு வகை மாத்திரையையும் பிள்ளை அவர்கள் எப்போதும் தன் கைவசம் வைத்து இருப்பார்.

சக வித்வான்களுக்கோ அல்லது தான் செல்லும் இடங்களில் யாருக்கேனும் திடீர் உடல் சார்ந்த அசௌகரியம் ஏதேனும் ஏற்பட்டால் அம்மருந்துகளில் பொருத்தமான ஒன்றினைத் தந்து சுகமாக்கிவிடுவார். இன்று போல் மருத்துவர்களும், மாத்திரைகளும் - மருந்தகங்களும் அவ்வளவாக இல்லாத அக்காலத்தில் அவரது பரோபகாரம் பலருக்கும் பேருதவியாக இருந்துள்ளது.

அதே சமயம்; எடுத்த எடுப்பில் எல்லோருக்கும் மருந்து பொட்டலத்தை எடுத்து பிரித்துவிட மாட்டாராம். அப்படி ஒரு தேவை, அவசியம், நிர்பந்தம் ஏற்படும்பட்சத்தில் தான் வணங்கும் பழனி முருகனிடம் உத்தரவு கேட்பாராம். அவருக்கு மட்டுமே புரியும் வகையில் அந்த உத்தரவு அமையுமாம். கிரீன் சிக்னலாக இருந்தால் மட்டுமே வாயை திறப்பாராம். அதுவே ரெட் சிக்னல் எனில் அது அவனது 'கர்மா' என முடிவெடுத்து வாயை மட்டுமல்ல; மருந்து பொட்டலத்தையும் திறக்கவே மாட்டாராம். உள்ளூர் வைத்தியரை அழைத்துவரச் சொல்லி உதவிடுவாராம்.

**– டி.எஸ்.டி.ராயன்**



# மண்ணிசை



புஷ்பவனம் குப்புசாமி

இரண்டாம் நூற்றாண்டின் சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புறப் பாடல்கள் பாடப்பட்டு வந்ததற்கான சான்றுகளாக குரவைப் பாடல்கள், பண்ணத்தி, கானல்வரிப் பாடல்கள் மூலமாக அறியலாம்.

ஏழாம் நூற்றாண்டிலிருந்து 12-ஆம் நூற்றாண்டு வரையிலான தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தங்களிலும் நாட்டுப்புற இசை வடிவங்களைக் காணலாம். இந்த நாட்டுப்புறப் பாடல்களில் காணப்படுகின்ற அத்தனை இசை வடிவங்களும் தேவாரப் பாடல்களில் உள்ளது. ஆகவே, தமிழிசைக்கு வித்திட்டது நாட்டுப்புறப் பாடல்களே என்பதனை யாராலும் மறுக்க முடியாது.

காரணம், தேவாரம், திருவாசகம் போன்றவைகளுக்குப் பின் மூன்று நூற்றாண்டுகள் கழித்து பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கீத மும்மூர்த்திகள் ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துச்சாமி தீட்சிதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் இவர்களாலேயே கர்நாடக இசை வளர்த்தெடுக்கப்பட்டது. அந்த வகையில் ஆராய்ந்தால் முதலில் வந்த தமிழிசைக்கும் அதன் பின் வந்த கர்நாடக இசைக்கும் அடிப்படை நாட்டுப் புறப் பாடல்களேதான் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

அதனை நிரூபிக்க நாட்டுப்புறப் பாடல்களில் எவ்விதமான இசை வடிவம் இருக்கிறதென்றும் அவைகளை எப்படியெல்லாம் கர்நாடக இசையில் எடுத்து கையாண்டிருக்கிறார்கள் என்பதையும் நிரூபணங்களுடன் காண்போம்.

தை மூன்றாம் நாள் அதாவது காணும் பொங்கல் கொண்டாட்டத்தில் கிராமத்தில் பெண்கள் கூடிப்பாடும் பாடல் இது:

புள்ளையாரே புள்ளையாரே
புடிச்சு வச்சப் புள்ளையாரே
மேல் வருஷம் மார்கழி மாசம்
வந்தீங்களே புள்ளையாரே
எருக்கம்பூச் சூடியல்லோ
எடுத்து வச்சப் புள்ளையாரே
அருகம்புல் சூடியல்லோ
அணச்சுவச்சப் புள்ளையாரே
பறங்கிப்பூச் சூடியல்லோ
பாத்து வச்சப் புள்ளையாரே!
செவந்திப் பூச்சூடியல்லோ
சேத்து வச்சப் புள்ளையாரே

மேற்கண்ட பாடலின் இசை வடிவம் கர்நாடக சங்கீதத்தில் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இயற்றிய கிருதியில் உசேனி ராகத்தில் இடம் பெற்ற பாடலில் வருகிறது.

ராகம்: உசேனி - தாளம் : ஆதி

ரகுவீர ரணதீர ராரா ராஜகுமாரா!

ப்ருகுஸீனு மதவிதார ப்ருந்தாரகாதார.

அடுத்ததாக ஒரு கிராமியத் தாலாட்டுப் பாடலைக் கொள்வோம்;

ஆராரோ ஆரிராரோ என் கண்ணே
ஆராரோ ஆரிராரோ
மாமன் அடிச்சாரோ - என் கண்ணே
மல்லிகைப் பூச் செண்டாலே!
அத்தை அடிச்சாரோ என் கண்ணே
அரளிப் பூச் செண்டாலே!
யாராடிச்சார் ஏனமுதாய் - என் கண்ணே
எங்கள் குல ரத்தினமே!
அடிச்சாரை சொல்லியழு - என் கண்ணே
ஆக்கினைகள் செய்திடுவோம்!
வெண்ணையிலே விலங்கு பண்ணி - என் கண்ணே
வெய்யிலிலே போட்டு வைப்போம்!
தயிராலே விலங்கு பண்ணி - என் கண்ணே
தண்ணியிலே போட்டு வைப்போம்!
ஆராரோ ஆரிராரோ! என் கண்ணே
ஆராரோ ஆரிராரோ

இதே இசை வடிவத்தைக் கொண்ட கர்நாடக இசைப்பாடல் இதோ;

ராகம் : குறிஞ்சி தாளம்: கண்டசாபு
இயற்றியவர் : ஸ்ரீ தியாகராஜசுவாமிகள்

பவனஜா ஸ்துதி பாத்ர
பாவன சரித்ர
ரவிஸோம வர நேத்ர
ரமணீய காத்ர
ஸீதா கல்யாண வைபோகமே!
ராமா கல்யாண வைபோகமே

அடுத்ததாக ஒரு கிராமியக் காதல்பாட்டு

கொல்லையிலே கொய்யாமரம்
கொண்டையிலே தாழம்பூவு!
தாழம்பூவு வாசத்திலே



தான் மயங்கி மோகத்திலே
சோளப் பொறி மத்தியிலே
சுட்டு வச்ச தோசப் போல
நெலவுருக்குற நேரத்திலே - என் சின்னத்தங்கம்
நான் வருவேன் சாமத்திலே
மாடிமேல மாடி வச்சு
மாரு முட்டும் சன்னல்வச்சு
சன்னலுக்கு உள்ளிருந்து
சந்தோஷமாப் பேசிடுவோம்!
ஆடி மாசம் போகட்டுண்டி
அடுத்த மாசம் சேந்துக்கலாம்
அதுவரைக்கும் பக்கம்வாடி! என் சின்னத்தங்கம்
அச்சாரமா ஒண்ணு தாடி

மேற்கண்ட பாடல் காலம் காலமாக நாட்டுப்புறப் பெண்களால் சிரிப்பலைகளுக்கு இடையே வயது வித்தியாசமின்றி பாடப்படும் பாடல்.

ஆனால், இப்பாடல் ராகபாவம் சிறிதும் மாறாமல் ‘கரகரப்ரியாராகத்தில்’ அமைந்துள்ளது. கர்நாடக சங்கீதத்தில் நிரவல், சுரம் பாடுவது போல் மேற்கண்ட பாடலுக்கும் பாட இயலும்.

மற்றுமொரு காதல் பாடல்

ராசாத்தி ஒன்ன எண்ணி
ராப்பகலா கண் விழிச்சேன்
ராப்பகலா கண் விழிச்சேன்
ராணி உன்னக் கைபுடிச்சேன்
மஞ்ச செவந்திப் பூவாம்

மன்னார்குடி பூத்தப் பூவாம்!

மன்னார்குடிக்குப் போயி வந்தேன்

மரிக் கொழுந்து வாங்கி வந்தேன்!

மேற்கண்ட பாடல் முழுக்க முழுக்க ராகவடிவம் மாறாமல் ‘சிந்து பைரவி’ ராகத்தில் பாடப்பட்டுள்ளது.

அடுத்ததாக ஒரு கும்மிப்பாட்டு

ஆட்டருவி மூட்டங்கட்டி

அன்னம்போல் கிளிவளர்த்து

சோலக்கிளி போல வந்தார் - எந்தன் தாய்நாடே

முருகன் தோகமயில் ஏறி வாறார் பெத்த மாதாவே!

வடக்க நல்ல மழை கருக்க

வாட வாய்க்காத் தண்ணிவர

வாட வாய்க்காத் தண்ணியிலே - எந்தன் தாய்நாடே

முருகன் வண்டு மல்லிப் பூவெடுத்தார் பெத்த மாதாவே?

இது ‘ஆனந்தபைரவி’ ராகத்தில் ராக- பாவம் சிறிதும் மாறாது பாடப்பட்டு உள்ளது.

இன்னுமொரு காதல் பாடல்

தஞ்சாவூரு மண்ணெடுத்துச்

தாலி ஒண்ணு செய்யச் சொன்னேன்

தாலிருக்கும் மட்டத்திலே - நான்

தங்கியிருப்பேன் திட்டம் போல

வாடாதே - நீ

வாடாதே வசந்த மல்லிக ரோசாவே

தங்கத்துத் தங்கமே - என்

தனித் தங்கமே நீயிருக்க

பித்தளைக்கும் - ஈயத்துக்கும்

பிரியப்பட மனசுண்டோடி

வாடாதே - நீ

வாடாதே வசந்த மல்லிக ரோசாவே!

இப்பாடலின் இசைவடிவம் முழுவதும் “சாருகேசி” ராகத்தில் அமைந்துள்ளது. சாதாரண காந்தாரமும், அந்தரகாந்தாரமும் சில இடங்களில் மாறிமாறி வருகிறது.

மாதுளம்பூ மேனியனே முனியப்பா - எங்கள

மனசு வச்சுக் காக்க வேணும் முனியப்பா!

மலைபோல நீயிருக்க முனியப்பா! நாங்க

இலைபோல வாடலாமோ முனியப்பா!

தென்னம்பூ விரிஞ்சது போல் பல்லழகு!

தேங்காயின் சில்லுபோல பல்லழகு!

வன்னிமரம் தானசைய நடையழகு! நீ

வந்திறங்கும் கொலுமொகமே தனியழகு...

இப்பாடல் முழுக்க முழுக்க “நாத நாமக்ரியா” ராகத்திலே அமைந்துள்ளது.

இதே ஒரு உழவர் பாடல்

ஆத்திலே தண்ணீருண்டு

அதனருகே வயலுமுண்டு

சேத்திலே ஈரமுண்டு

சேர்ந்த ஜோடிக் காளையுண்டு

நாத்திலே பசுமையுண்டு

நட்டுவச்சா வெலைச்சலுண்டு

கீத்துப்போட்ட குடிசையுண்டு

கிளியைப் போல நீயுமுண்டு

சோத்துக்குக் கவலையில்லை செல்லம்மா!

ஒரு சோம்பலினால் பயனுமில்லே செல்லம்மா

கஞ்சிக் குடித்துவிட்டு

கழனி உழுபவர்க்கு

இஞ்சிச்சாறு ஏதுக்கடி? கரும்பே

இஞ்சிச்சாறு ஏதுக்கடி?

கல்லிலும் மண்ணிலும்

காலால் நடப்பவர்க்கு

வில்லுவண்டி ஏதுக்கடி? கரும்பே

வில்லுவண்டி ஏதுக்கடி?

மேற்கண்ட பாடல் முழுக்க முழுக்க ‘ஹரிகாம்போதி’ ராகத்தில் அமைந்துள்ளது.

இதேபோல் இன்னும் பற்பல பாடல்கள் இன்றைக்கு புழக்கத்தில் உள்ள கர்நாடக இசைப் பாடல்களை அச்சு அசலாக ஒத்து இருக்கின்றன.

சிந்துபைரவி, ஆனந்த பைரவி, நட பைரவி, செஞ்சுருட்டி, புன்னாக வராளி, நவரோசு, குறிஞ்சி, கரகரப்ரியா, ஹரிகாம்போதி, சங்கராபரணம், உசேனி, நாத நாமக்ரியா, நவரசக் கன்னடா போன்ற இராகங்கள் யாவும் நாட்டுப் புறப் பாடல்களிலிருந்து கர்நாடக இசைக்கு இடம் பெயர்ந்த இசை வடிவங்களே.

**– புஷ்பவனம் குப்புசாமி**

M.A.,M.Phil., PH.D. (MUSIC)

With best compliments



SMT. THANKAM KRISHNAN MEMORIAL TRUST (REGD.)

NARAYANA VISHWANATH


Chairman

'Gitalaya' AD-48, AD-Block,
1st Street, Anna Nagar, Chennai – 600 040.
Phone : 044-26212454 / 26214524
E-mail : nvishwat@gmail.com

SANGEETHA SARIGAMAPADANI Regd. No. TN/CC(S) Dn/386/10-12 RNI. No: 67100/97



பத்மஸ்ரீ
திருவாரூர் பக்தவத்ஸலம்



பத்மஸ்ரீ ரஞ்சனி – காயத்ரி